gd. M. 1803. JUNE 1927 Vol. [illegible] No. 11

6-JUL-1927 MADRAS

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள் :

கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

வருட சந்தா உள்நாடு ரூ. 2. வெளிநாடு ரூ. 2-8-0.

ஸ்னானத்திலும் ஓர் சௌக்கியம்!

Turkish Towels

படத்தில் காட்டியுள்ள "டர்க்கிஷ் துவாலை" பொதுவாக "தேங்காய் பூ துவாலை" என வழங்கப்படுகிறது. இதைப்போன்றதோர் துவாலை எப்பொழுதும் ஒவ்வொருவரிடத்திலுமிருக்க வேண்டியது அத்யாவசிய

ஏன்

(1) ஸ்னானம் ... யும்போது, உ... தேய்க்கவும், ... கை அறவே எ... விடவும் மிகவும் ... யோகப்படுகிற...

(2) ஸ்னானத்திற்குப் பின் உடம்பை நன்ற... துவட்டி, தலையிலேனும், உடம்பிலேனும், துளி ஜலம் கூட தங்கி நிற்க, இடமில்லாம விருப்பதற்கு உபயோகப்படுகிறது. ஆகையால் ஒன்றுக்கு இன்றே எழுதுங்கள்.

சயிஸ்,	44" நீளம்	× 22" அகலம்	விலை	ரூ. 1–4–0.
,,	56 ,,	× 28	,,	ரூ. 2–0–0.

K. S. Muthiah & Co.

Post Box 99 :: :: MADRAS

கையிலிருந்தாலும் அழகு!

பன்னிரு இதழ்களையும் ஒன்றாய்ச் சேர்த்து பைண்ட் செய்யப்பட்ட "லக்ஷ்மி" ஆண், பெண், சிறியோர், பெரியோர் முதலிய யாவரும் படித்து இன்புறக்கூடிய, கதைகள், நாவல்கள், பாடல்கள், ஹாஸ்யக் குறிப்புகள் முதலியவை அடங்கி யிருக்கின்றன. லக்ஷ்மியின் சந்தா நேயர்களுக்கும் பயன்படக்கூடியது. இன்றே …ர்றுக்கு ஆர்டர் செய்து வரவழைத்து, உங்கள் வாசக சாலையை …தப்படுத்துங்கள்.

1-வது வால்யம்	விலை ரூ. 3—0—0.
3-வது வால்யம்	விலை ரூ. 3—0—0.

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி 99 : : சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 JUL 1927
MADRAS

இனாம்! இனாம்!!

திருக்குறள் ஜெம் நோட்டு புக்

2 அணா தபால் ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு 100-பக்கமுள்ள திருக்குறள் ஜெம் நோட்டு புக் ஒன்று அனுப்பப்படும்.

4 அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு ஷை புக் 1-ம் அழகான புது மாதிரி திறவுகோல் வளையம் 1-ம் (Key Ring English Make) ஆக இரண்டும் அனுப்பப்படும்.

சொற்பக் காப்பிகளே கைவச மிருப்பதால் உடனே முந்திக்கொள்வது நலம்.

K. S. முத்தையா அண்டு கம்பெனி,
வில்க் ஹவுஸ்,
ஹைரோடு, திருநெல்வேலி.

A

லக்ஷ்மி

சந்தா விவரங்கள்.

இந்தியா, பர்மா, ஸிலோன் போன்ற உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ.	2	0	0
தென்னாபிரிகா, மலாய் நாடு, போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ.	2	8	0
ஜீவிய சந்தா (உள் நாடுகளுக்கு)	ரூ.	40	0	0
ஷை (வெளி நாடுகளுக்கு)	ரூ.	50	0	0

விளம்பர விகிதங்கள்.

முழுப்பக்கம் (மாதம் 1-க்கு)		ரூ.	8	0	0
அரைப்பக்கம்	ஷை	ரூ.	4	0	0
கால்பக்கம்	ஷை	ரூ.	2	8	0

இனாம் ! இனாம் !! இனாம் !!!

உதவியற்ற பொருளை வாங்குவதைவிட உள்ள தனத்தை இருப்பாக வைத்தல் நலம் (ஒருமுறை வாசித்து இரண்டுமுறை யோசிக்க வேண்டும்) குளிர்ச்சி பொருந்திய ஒரு மூக்கு கண்ணாடியும் ஒரு பவுன்டென் பேனாவும் இனாமாய்த் தரப்படும்.

22 காரட் ரோல்ட்கோல்ட் கோல்டன் டையல் ரிஸ்ட்வாட்சு.

எங்களுடைய ரிஸ்ட்வாட்சு கடியாரம் 10-வருடத்திற்கு காரன்டி என்று கேசின் உள்புறத்தில் ஸ்டாம்பு குத்தி உள்ளதும், ஆண், பெண் இருவர்களும் அணியக்கூடிய பூஷணங்களில் இது ஓர் கரபூஷணமாக ஜொலித்து சரியான காலத்தை காட்டக்கூடியதும் பார்வைக்கு வெகு அழகையும் மதிப்பையும் தரக்கூடியதுமான இயந்திரம் இதுவே. இது கைதேர்ந்த மெக்கானிக்கல் இன்சினீயர்களால் முயர்ச்சியோடு செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 7.

விலாசம் :—ஓவர்ஸீஸ்சுவிஸ் வாட்சு கம்பனி.

மவுண்ட் ரோட்டு மதராஸ்.

மைசூர் மஹா ராஜா.

OFFICE OF THE REGISTRAR OF
No.
12 SEP 1927
MADRAS

ஓம்

லக்ஷ்மி

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி
பிரசுரித்து வரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா
பத்திராசிரியர் : K. S. சுந்தரம்

மலர் 5.	பிரபவஞு ஆவணிமீ **1927** ஆகஸ்டுமீ	இதழ் 1.

அட்டவணை.

1. லக்ஷ்மி துதி ... ... I.
2. முரசு ... ... II.
3. ஸ்ரீ ஹர்ஷ சரிதம் 1
4. ஆத்திச்சூடி அருமை 5
5. இந்து எடிஸன் 8
6. நட்டாஜி அல்லது சிவாஜியின் சேனைத் தலைவன் 11
7. பெரிய புராணப் பெண்ணரசிகள் ... 21
8. கிளி 25
9. மதுசாரம் 28
10. உலகப்போக்கு 37
11. காலனைக்கட்டி யடக்கிய கடோரசித்தன் ... 41
12. பத்திராசிரியர் குறிப்பு 45
13. டாக்கா மஸ்லின் 52

சித்திரப் படங்கள்.

1. மைசூர் மஹா ராஜா.
2. டாக்டர் பிஸே (இந்து எடிஸன்).
3. கங்கையின் ஸ்னான கட்டங்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008
2/10368

சந்தா நேயர்களுக்கு

முக்கிய கவனிப்பு.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 30-ந் தேதியில் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும், அந்தந்த மலரின் முதல் சஞ்சிகையிலிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் உள் நாட்டு நேயர்கள் 10-ந் தேதிக்குள்ளும், வெளி நாட்டார் 15-ந் தேதிக்குள்ளும், சந்தா நம்பருடன் ஆபீஸுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சந்தா நேயர்களாயிருப்பவர்கள், எவ்விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லெட்டர் எழுதினாலும், சந்தா நம்பருடன் எழுத வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் விலாசக் கவரில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினால், மாறுதல் விலாசத்தை, 25-ந் தேதிக்குள், சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும.

லக்ஷ்மிபால் அன்பு கொண்டுள்ள நேயர்கள் தங்கள் பந்து மித்திரர்களையும், லக்ஷ்மிக்கு சந்தா நேயர்களாக சேர்த்துவிடக் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

மானேஜர்

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால்பெட்டி, 99. சென்னை.

லக்ஷ்மி துதி.

திருமகளே! திருப்பாற் கடலூடன்று தேவர் தொழ
வருமகளே! உலகெல்லாமும் என்றென்றும் வாழ்
[வைக்கும்
ஒருமகளே! திருமால் உரத்தே யுற்றாரம் பெரிது
தருமகளே தமியேன் தலைமீது நின் தாளை வையே.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
அதை விளக்கஞ் செய்தல் வேண்டும்.

முரசு.

வெற்றி யெட்டுத் திக்கு மெட்டக் கொட்டு முரசே
வேத மென்றும் வாழ்க வென்று கொட்டு முரசே
நெற்றி யொற்றைக் கண்ணனோடே நிர்த்தனஞ் செய்தாள்
நித்த சக்தி வாழ்க வென்று கொட்டு முரசே.

1. ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்
சீருக்கெல்லா முதலாகும்—ஒரு
தெய்வந் துணை செய்ய வேண்டும்.

2. வேத மறிந்தவன் பார்ப்பான்—பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்
நீதி நிலை தவறாமல்—தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன்.

3: பண்டங்கள் விற்பவன் செட்டி—பிறர்
பட்டினி தீர்ப்பவன் செட்டி
தொண்டரென் றோர்வகுப் பில்லை—தொழில்
சோம்பலைப் போ லிழி வில்லை.

4. நாலு வகுப்புமிங் கொன்றே—இந்த
நான்கினி லொன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே—செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி.

5. ஒற்றைக் குடும்பந் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடச் செய்பவ ளன்னை.

—பாரதி.

ஸ்ரீ ஹர்ஷ சரிதம்.

ஸ்ரீமான் சி. செல்லம் எழுதியது.

சீருஞ் சிறப்புந் திகழும் நாடு கண்டவனென்றும் அரசியல் முறையில் மிக ஆற்றல் கொண்டவனென்றும் தீரமுள்ள போர்வீரனாகவும் புலவரைப் போற்றும் புலவனாகவும் பாரதத் தாய்க்கு பொற்பளிக்குந் திலகமாய் விளங்கினார் ஸ்ரீ ஹர்ஷ சக்கிரவர்த்தி, பேரறிவு வாய்ந்த இச் சக்கிரவர்த்தியைப்போல தன்னகத் தடங்காப் புலன்களை யடக்கி இல்லறத்திருந்து அரசாண்டவர் யாவருமில்லை யெனக் கூறலாம். பாரத நாட்டவரிடத்திலும் பிறதேசத்தவரிடதித்லும் அவர் ஒரே மாதிரியான அன்பைச் செலுத்திவந்தார். விசேஷமான செயல் திறனும் ஈசுவர பத்தியும் தான சீலமும் இவரிடம் குடிகொண்டிருந்தன. இவரைப் போல வெறுப்போடு அரசர் பதவிக்கு வந்தவர் வெகு சிலரே. ஆற்றலாலும் அரசியல் முறையாலும் இந்தியாச் சரித்திரத்தில் ஒரு முக்கியமான நிலைபெறத் தகுந்த பெரியாருடைய பெயர்களை எண்ணுங்கால் ஸ்ரீ ஹர்ஷனுக்கு முதலாவது பதவியை அளிக்கவேண்டும்.

காலவியல்பு. (க)

இவர் அரசாண்ட காலம் ஆறாவது நூற்றாண்டு. இக் கால நிலையைப் பற்றி முதலில் கவனிப்போம். வீரத்திற்கும் செல்வத்திற்கும் பெயர் பெற்ற குப்தராஜ வம்சம் இக்காலத்தில் பெயரளவாயது. கிழக்கும் மேற்கும் கடல்களும் இமயமலையும் நர்மதா நதிக்கரையும் எல்லையாக்

கொண்டு விலாசமானதும் முக்கியமானதுமான ஒரு நாடு கண்டு அதைக் குடிகளின் நலம் பேணிக் கோலோச்சி ஆரிய பாஷைக்கு ஆக்கங் கொடுத்து, காளிதாஸாதி கவிகளைப் போற்றிக் கீர்த்திவாய்ந்த குப்த அரசியலுக்கும் நாளடைவில் நாசம் வந்தது. குப்த அரசர்களில் கடைசியிலிருந்த நரசிங்ககுப்த பாலாதித்தியனுடைய காலத்தில் ஹூணர்கள் தோரமண னென்ற ஒரு தலைவன் கீழ் குப்தவரசியலை பேதப்படுத்தினார்கள். அதிலடங்கின மாள்வாவில் சுதந்திரமான அரசியலை நிலைநாட்டினார்கள். இவர் நாகரீகமற்ற கூட்டத்தவர். 5-வது நூற்றாண்டில் துருக்கியில் தன் உறைவிடத்தை உறுதிப்படுத்தி, ஹீறற்று எனும் தலைநகரங்கண்டு வாழ்ந்தார்கள். குப்த ராஜவம்சம் கி. வ. 750ல் மகதத்தை ஆண்டு வந்ததாலும் அதைச்சுற்றிலுமுள்ள சற்று இடங்களில் அவருடைய ஆணை நிலவியது. தோராமணனுடைய வருகையோடு அவ்வளவு சிறப்பற்றதாகிவிட்டது.

தோராமணன் மாள்வாவில் சுதந்திரநாடு கண்டு கி. வ. 510 வரையிலும் ஆணை செலுத்தி வந்தான். அவனுக்குப் பிறகு அவன் மகன் “மிஹிரிகுலன், அரசேற்றான்.. இவன் ஆட்சிக் காலத்தில் ஜனங்கள் இன்னலுற்றார்கள் சமணத்துறவிகளையும் பௌத்த பிக்ஷுக்களையும் காரணமின்றி வருத்தி வந்தான். இவன் கொடுங் கோன்மையை எச்சமயநூலும் இழிந்து கூறின. மகதத்து மன்னவனாகிய பாலாதித்தியனுடையவும் மாள்வா மன்னனாகிய யசோதரனுடையவும் தூண்டுதலால் இரு இந்து அரசர்களுடைய சேனைகள் கி. வ. 528ல் மிஹிரிகுலனை வென்று நாட்டில் சமாதானத்தை பரிபாலித்தன் பிறகு அக்கொடியவன் காஸ்மீரத்துக் காவலனிடம், சரணன் புகுந்து அவனை வஞ்சனை

செய்தானாயினும் வெகுநாளாக வாழவில்லை. இவனுடைய சாவால் ஹூணர்களுடைய ஊக்கங்கெட்டது.

ஐந்தாவது நூற்றாண்டு முதல் ஆறாவது நூற்றாண்டு வரையிலும் முக்கியமான சம்பவங்களொன்றுமுண்டாக வில்லை. மிஹிரி குலனை வென்ற யசோதரனைப்பற்றி மிகுதியாக ஒன்றுந் தெரியாவிட்டாலும் 'மன்தோஸர், கல்வெட்டிலிருந்து குப்த ஸாம்ராட்டைவிட ஒரு பெரிய நாட்டை ஆண்டிருந்ததாகத் தெரிகிறது. யசோதரனுடைய நாடும் அவனுடைய மரணத்திற்குப் பிறகு பலவாகப் பிரிந்து விட்டது. வடபாகத்தில் பல சிறு சிறு நாடுகள் தலையெடுத்தன. அவைகளில் குஜராத்திலுள்ள வலபி நாடும் கூர்ஜரமும் யசோதரனுடைய குலத்தவர் ஆண்டுவந்த மாளவ நாடும் தில்லிக்கு அண்டையிலுள்ள தனேசுவரமும மௌகிரி அரசகுலமும் குப்த அரச குலமும் அரசாண்ட இடங்களும் வங்காளத்திலுள்ள கர்ண சுவர்ண ராஜியமும் முக்கியமானவை. இவைகள் ஒவ்வொன்றும் வேற்றுமையால் கலவரப்பட்டு வந்தன. இக்கலவரத்தைக் கூறினால் அதே ஒரு பெரு வருணனையாக முடியும். வேங்கடமலையின் தென்பாகத்தில் பல நாடுகளை ஒன்றாகச் சேர்த்து புலிகேசியென்பவன் ஒரு முக்கிய நாட்டையுண்டுபண்ணி ஆண்டுவந்தான். வட இந்தியா முழுமையும் பெருங் கலவர மாகவே இருந்தது.

ஆயினும் குப்த அரசர்களுடைய காலத்தில் தொடங்கின முற்போக்குத் தளர்ந்து விடவில்லை யெனலாம். ஆரிய மொழி புத்துயிர் பெற்றதும் புதிய இந்து மதத்தின் பிரசாரமும் மஹாயான மதத்திற்கு அதோடுள்ள ஒற்றுமையும் ஒரே காலத்திலுண்டாயின. அக்காலத்திய அறிவுங் குன்றி விடவில்லை. சோதிடத்தில் தேர்ந்த வாராஹமித்திர

னும் கணிதத்தில் கைதேர்ந்த ஆரியபட்டன் முதலான பல முக்கியமானவர்களும் இக்காலத்தில் வாழ்ந்து வந்தனர். இந்து மதம் புதுப்பிக்கப்பட்டது. இவைகளை ஐந்தாவது நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த பாஹியானுடைய மொழியாலும் ஏழாவது நூற்றாண்டில் வந்த யுவாங்சுவானுடைய மொழிகளாலும் தெளியலாம். பாஹியான் இந்தியாவில் யாத்திரை செய்யும்போது குப்த அரசர்கள் ஹிந்துமதத்தை ஆதரித்து வந்தவராயினும் ஆரியவர்த்தமெங்கும் புத்த மதமே நிலவிநின்றது. அசோகனுக்குப் பிறகு இரண்டு மதக்கொள்கைகளும் ஒன்றாகக் கொள்ளப்பட்டதால் ஆரியர்களுடைய தரும தத்துவங்களுக்கும் கௌதம புத்தருடைய சித்தாந்தங்களுக்கும் ஒற்றுமையுண்டாயிற்று. அரசர்களுடைய வைதீகமுறைப் படியுள்ள தானங்களை ஏற்பதில் பிராமணருக்கும் புத்தமதத்தவருக்கும் புகாருண்டாயின. குப்த அரசர்கள் பிறமதத்தை வெறுப்பவராயினும் இந்துமதத்தை போற்றிவந்தனர். இதைக்கண்டு பாஹியான் புத்தமதத்திற்கு இடிவுண்டாயதென்று கூறுகிறான்.

மேற்சொன்ன யாவற்றாலும் ஆறாவது நூற்றாண்டின் பிறகு இந்தியா மேற்கதியை அடைந்து வந்தது. நாடும் சமயமும் பலவாறு பிரிந்து கிடந்தன. அதை ஒன்றுபடுத்த ஒரு பெரியாரின் பிறப்பு இன்றியமையாததாக விருந்தது.

(தொடரும்.)

ராமாயணத்தில் கபந்தன் என்னும் ஓர் அரக்கன் வனத்திலுள்ள எல்லா ஜீவராசிகளையும் தன் கைகளை நீட்டிச் சேர்த்து அப்படியே விழுங்கி விடுவானாம். அம் மாதிரியே சமுத்திரத்திலும் அரக்க ஜாதி மீன் இருக்கிறதாம். அதற்கு விசிறிக் கூடு என்று பெயராம். அது இருந்த இடத்திலேயே அசைவற்று வாயைத்திறந்து கொண்டிருக்குமாம். மீன்களும் இதர நீர் வாழும் ஜந்துக்களும் ஏமாந்து அதில் சிக்கிக்கொண்டு, அந்த அரக்க மீனுக்கு உணவாகி விடுகின்றனவாம். அந்த மீன் இரண்டரை அடி நீளமுள்ளதாம். லண்டன் கண்காட்சி சாலையில் அம்மாதிரி மீன் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறதாம்.

ஆத்திச்சூடி அருமை

(**K. V.** ஜெகநாதன் எழுதுவது.)

தண்டமிழ் நாட்டில் தமிழ்த்தாய்க் கணியெனப் பொலியும் சிறந்த நூல்கள் பல ஆன்றோர்களால் யாக்கப்பட்டுள்ளன. மக்கள் வாழ்விற்கின்றியமையாதனவாம் நன்னெறிகளை அறிவுறுத்தும் நூல்கள் பல. நாலடியார், திருக்குறள் முதலியன தம்பாற் பெருகிய அன்பொடும் ஓதி யுணர்வோர்க்கின்புறூஉம் நெறியில் ஆற்றுப்படுத்துவனவாம். இளமக்கள் தம் நெஞ்சத்தே நீதிகள் பதிய வேண்டும் என்னும் கருணை முதிர்வால் நந்தமிழ் மூதாட்டியாராம் ஔவையார் சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தல் என்னும் அழகுகள் சிறந்து பொலிய 'உலகநீதி, ஆத்திச்சூடி, முதலிய நூல்கள் இயற்றினர். அவற்றுள் ஆத்திச்சூடி, என்பது ஒன்றாம். பெரும்பாலும் பள்ளிப்பிள்ளைகள் தம்மனத்தே நன்கு பதியும் அச்சூத்திரங்கள் இனிய பொருள் தருவதோடன்றி பொருளாழம் மிகுந்து விளங்குகின்றன. இது 'ஆத்திச்சூடி' என்றதொடரால் கடவுள் வணக்கம் கூறி ஆரம்பித்தமையின், முதல்நிமித்த என்றும் காரணத்தினானே நூற்பெயரும் அத்தொடரானே அமைந்தது என்க. இந்நூல் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பேறுகளைக் கூறுவதொன்றாம். முதலில் அறத்தைப்பற்றிக் கூறுவான் எடுத்துக்கொண்டு 'அறம் செய விரும்பு' எனக் கூறி இடையே பொருள் குறித்துப் 'பொருடனைப் போற்றி வாழ்' எனவும், தொடர்ந்து இன்பங்குறித்து 'மெல்லியலாள் தோள் சேர்' என்றும், இறுதிப் பகுதியில் 'வீடுபெறநில்' என்றும் முறையின்வைப்பெனும் அழகு பொலிய அமைத்தது காண்க. சிறிய மொழிகளாலான சிறு சொற்றொடரேனும், பல்வகைப்பொருளைத் தெளிவுறுத்தல் வியக்கத்தக்கதொன்றாம்.

இனி இதன் முதல் எழூஉம் தொடரைச்சிறிது ஆராய்வாம். 'அறஞ் செய விரும்பு' என்பதே அஃதாம். இதன்

பொருள் தர்மம் செய்ய ஆசைப்படு என்பதாம். ஈதலறம் என ஔவையாரே கூறியிருத்தலின் ஈய ஆசைப்படு எனவும் கொள்ளலாம். அறம் செய் என்னாது அறம் செய விரும்பு எனக்கூறியது என்னை ! ஆராய்தும்.

விருப்பம் நெஞ்சத்தே எழுவதொன்றும். அக மகிழ்ந்து விரும்புதல் ஈகையின் இலக்கணம் ஆதலின், ஈவது நினது விருப்பொடும் ஆக என்பதனை இது குறிக்கும் என்க. என்னை ! ஈவான் அழுக்காறு, அவா வெகுளி, இன்னாச் சொல் ஆதிம் ஒருவினாற்றான் அது ஈகையாதலான். அன்றியும், நெஞ்சகத்தே வஞ்சகத்தொடும் ஆற்றும் அறம் இரு தரத்தினர்க்கும் பயன் இன்னும். அன்பின்றி வேறு காரணத்தாற் புகழ் முதலிய ஆசை மேலீட்டால் ஈயமுற்படுபவன் அறத்தாலாம் நல்வினையைப்பெறான். இரப்பவனும் விரும்பி ஈயார் மாட்டுப் பெறுதற்குக் கோணுவான். அறம் செய விரும்புதல் அறம் கொள்வாரை எதிர் பார்க்கும் நிலை ஈயும். நெஞ்சத்தே அறம் செய்யவேண்டும் என்னும் வேட்கை உற்றகாலையே, கொள்வார் எவர் உள்ளார் என நாடியிருக்கும் உள்ளம் ஆதலின், நாடிவந்தவர்க்கு எதிர்பார்த்திருந்த அன்புமே லீட்டினால் உபசாரங்கள் மிகவே செய்தலால் அறம் சிறக்கும் என்க.

'நாடிய மனத்தினோடு நாயன்மாரடைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்துவந்தார்.

பெரியபுராணம்—மெய்ப்பொருள் நாயனார் புராணம்.

என சேக்கிழார் திருவாக்கு ஈண்டாராய்தற்பாற்று. எனவே 'அறம் செய விரும்பு' என்றார்.

மற்றும் ; அறம் செயயவெனின் பொருளுடையார்க்கே இயலும். அஃதில்லார் ஒல்லார் எனினும், அவர் மாட்ட்டுப்பிறர்க்கு ஈதல் வேண்டும் என்னும் விருப்பம் எழின் அது நலமாம். யாவருக்கும் எளியதொன்றைக் கூறப்புக்க மூதாட்டியார் யாவராலும் செயக்கூடும் இஃதைக் கூறினார் என்க. எளியாரும் அறம்செய விரும்பலாம். செல்வர்களும் விரும்பலாம். விருப்பம் முறையினமைந்ததெனின்

செல்வர்கள் ஈயத்தலைப்படுவர். இயலாதார், விருப்பம் முதிர முதிர அந்நல்லெண்ணம் அவர் தம்பால் இறைவன் அருள்வாய்க்கும்படி செய்யும் அறம் செய்வான், அகத் தானமர்ந்து இனிது கூறி ஆற்றல் வேண்டும்.

'முகத்தானமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன் சொலினதே அறம்'—குறள்.

'அகத்தானும்' என்ற தொடர் நெஞ்சகச் செய்கையையும், 'இன்சொலினதே' என்பது மொழிச் செயலும், 'அறம்' என்றது உடற் செய்கையையும் கூறும். மன மொழி மெய்களால் ஆற்றுவது அறமாம். அவற்றுள் இய லுவார் நெஞ்சில் விரும்பின், செயலில் கொணர்ந்து ஏனைய இரண்டினையும் செய்வார். இயலாதார் நினைப்புமாத்திரத் தில் நல்வினை எய்துவர். துறவியர்கள் நெஞ்சத்தால் நினைப்பதும் ஒரு அறம் எனக் கொண்டனர்.

'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே'—தாயுமானவர்.

என்பதில் 'நினைப்பதுவே' என்பதில் எமது கொள்கை மிளிர்கின்றது. பெரியோர்கள் 'சர்வேஜனாஸ் சுகினோபவந்து' என விரும்பினார்கள். ஆதலின் விரும்புதலும் அறமே. இத்துணையும் கூறியவாற்றால் 'அறம் செய விரும்பு' என்பதன் சிறப்புப் பொருள் வெளியாமென எண்ணுகின்றோம். இத்தகைய சிறுமொழிகளுள் உறு பொருள் இனியது! வெகு இனியது! சிறுநூல்களெனப் புறக்கணியாது ஆழ்ந்த ஆராய்ச்சி புரியின் தண்டமிழ்த் தாயின் அழகு இச்சிற்றுருவில் வழிந்து பொழிதல் காண லாம். அமையம் நேரில் இனியும் படர்வம்.

அலாஸ்கா நாட்டில் ஆறடி உயரத்தில் புற்கள் வளர்கின்றன வாம்.

நீலநதி தீரத்தில் ஒன்பதாயிரம் வகையான மீன்கள் வாழ்கின்ற னவாம்.

"இந்து எடிஸன்"

டாக்டர் பிஸே.

ஸ்ரீ. எடிசன் பிரபல ஆங்கில சாஸ்திர ஞானி. அவரை உலகத்தில் போற்றுதார் யாருமிலர். அவர்தான் பாடும் பொட்டியை (கிராம் போன்) முதன் முதலாகக் கண்டு பிடித்தவர். இவ்வாறே "இந்து எடிசன்" என்றழைக்கப்படும் டாக்டர் எஸ். எ. பிஸேயின் புகழும் உலகமெங்கும் பரவியிருக்கின்றது. டாக்டர் பிஸே இந்தியர் என்பது கேட்டு இந்திய மக்கள் ஒவ்வொருவரும் பெருமை கொள்வார்களென்பதில் சந்தேகமில்லை. இந்தியாவின் கௌரவத்தைப் பெருக்கி வெளிநாட்டாரை வியக்கச் செய்யத்தக்க பல நூதன கருவிகளைக் கண்டு பிடித்துள்ள இந்தியத் தாயின் அருந்தவப் புதல்வருள் ஒருவரான சர் ஜெகதீச சந்திரபோஸைப் போன்றே டாக்டர் எஸ். எ. பிஸேயும் பாரதத்தாயின் போற்றற் குரிய புதல்வருள் ஒருவர். இவரை இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், ஐரோப்பாவில் பல நாடுகளிலும் போற்றிப் புகழாதாரில்லை. டாக்டர் பிஸேயுக்குத் தற்போது வயது அறுபதாகின்றது. சமீபத்தில் அவருடைய அறுபதாவது வருடப் பிறப்பு விழாவின் சம்பந்தமாக அமெரிக்காவிலுள்ள அமெரிக்க சாஸ்திர நிபுணர்களும், இந்தியர்களும் ஆடம்பரமான விருந்தொன்று நடத்திவைத்தனர். டாக்டர் பிஸே பம்பாய்வாசி. அவர் இந்தியாவைவிட்டு வெளிநாடுகளுக்குச் செல்லுமுன் பம்பாயில் தான் வசித்துவந்தார். தற்போது அவர் அமெரிக்காவில் குடியேறி நிலைத்து விட்டதாகத் தெரிகின்றது. அமெரிக்காவில் நான்கு திசைகளிலும் டாக்டர் பிஸேயைப் போற்றிப் புகழாதாரில்லை. தமக்கும் தம் தாய் நாட்டுக்கும் பெரும் புகழைச் சம்பாதித்து உத்தம வாழ்க்கையி லீடுபட்டுள்ள டாக்டர் பிஸேயைக் குறித்து பொதுவாக இந்தியா முழுதும் முக்கியமாக பம்பாயும் பெருமை பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றது. அமெரிக்காவில் அவருக்கு 'இந்து எடிஸன்' என்ற சிறப்புப் பெயர் கொடுத்திருக்கின்றனர்.

இந்து எடிஸன்

டாக்டர் பிஸே தம் இளமைப் பருவமுதற் கொண்டே பல நூதனக் கருவிகளைக் கண்டு பிடிப்பதில் சிறந்து விளங்கினார். 1893-ம் வருடத்திலேயே பம்பாயிலும் அவர் புகழ்பட வாழ்ந்து பல அரிய கருவிகளைக் கண்டு பிடித்திருக்கின்றார். அவர் அக்காலத்திலேயே ஒரு பொருள் மற்றொரு பொருளாக மாறும் மாயத்தைக் கண்ணால் காண்பதற்கு அனுகுணமான பல கருவிகளைக் கண்டுபிடித்து புகழ்பெற்றார். 1898-ம் வருடத்தில் அவர் அரைத்த காபித்தூள் சர்க்கரை, மாவு முதலான வஸ்துக்களைத் தானாக நிறுத்துவைக்கும் அரிய கருவி யொன்றைக் கண்டு பிடித்தார். அதற்காக லண்டனிலுள்ள "இன்வெண்டார்ஸ் ஜர்னல் அண்டு சைன்டிபிக் ரெகார்டு" என்னும் பத்திரிகையைப் பிரசுரிக்கும் சங்கத்தார் டாக்டர் பிஸேயுக்குப் போட்டிப் பரிசுமளித்தார்கள்.

பிறகு டாக்டர் பிஸே இங்கிலாந்துக்குச் சென்றார். காலஞ்சென்ற இந்தியத் தந்தை ஸ்ரீ. தாதாபாய் நௌரோஜி போன்ற பிரபல இந்தியர்கள் டாக்டர் பிஸேயின் விஷயத்தில் விசேஷ ஊக்கங் காட்டினார்கள். இங்கிலாந்தில் ஒரே இயந்திரத்தில் அநேக அச்சுகளை வார்ப்பது சாத்தியமல்லவென்று நினைத்தனர். ஆயினும் டாக்டர் பிஸே இப்பெரும் பிரச்னையை ஊதிவிட்டார். அவர் 1905-ம் வருடத்தில் பிஸோடைப் மெஷீன் என்னும் இயந்திரமொன்றைக் கண்டு பிடித்தார். அவ்வியந்திரம் ஒரு நிமிஷத்தில் 1200 அச்சுகளைத் தனியாக வார்த்து ஒன்று சேர்க்கும் சக்தியுடையதாயிருந்தது. அதன் பிறகு காலஞ் சென்ற பெரியார் சர். ரத்ன தாதாவின் பொருளுதவி கொண்டு நமது எடிஸன் தாம் முதலில் கண்டுபிடித்த பிஸோ டைப் இயந்திரத்தை அபிவிருத்து செய்து ரோடரி முறையில் நிமிஷத்திற்குத் தனித்தனியே 3000 எழுத்துக்களை வார்த்து ஒன்று சேர்க்கும் போாற்றலுடைய அரிய இயந்திர மொன்றையும் கண்டுபிடித்தார்.

மகா யுத்தத்தின்போது டாக்டர் பிஸே அமெரிக்காவுக்குச் சென்று ஆங்கு புதிது புதிதாக பல அச்சடிக்கும் இயந்திரங்களையும் கண்டு பிடித்தார். எந்த இயந்திரத்தில் வேண்டுமானாலும் பதித்துத் தனித்தனியே

3

எழுத்துக்கள் வார்க்கும் அச்சு முதன்முதலாகக் கண்டு பிடித்தவரும் அவர்தான். அமெரிககாவிலுள்ள அச்சு வார்க்கும் கார்பொரேஷன் கம்பெனியார் இவ்வியந்திரத்தைப் பேடெண்ட் செய்திருக்கின்றனர். இவ்வியந்திரங்கள் சீக்கிரத்திலேயே உலக மார்கட்டுகளெங்கும் பரவும். டாக்டர் பிஸேயை அமெரிக்காவிலுள்ள நூதன கருவிகள் கண்டுபிடிக்கும் நிபுணர்களின் தேசிய அங்கத்தின் மெம்பராகவும் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். அச்சுக்கோர்க்கும் இயந்திரங்களிலும், அச்சுவார்க்கும் இயந்திரங்களிலும் உலகமுழுவதும் அவரைத்தான் அவ்விஷயங்களின் அதிகாரியாக மதிக்கப்பட்டிருக்கின்றது.

நூதன இயந்திரங்கள் பலவற்றைக் கண்டுபிடித்திருப்பதுடன் டாக்டர் பிஸே ரசாயன சாஸ்திர ஆராய்ச்சியிலும் கைதேர்ந்தவராய் உலகினுக்குதவும் பல அரிய மருந்து வகைகளேயும் கண்டுபிடித்திருக்கின்ருர். இவ்வற்றுள் "ரோஷா" "பெஸ்லின்" என்னும் மருந்துகள் முக்கியமானவை. சமீபத்தில் அவர் 'ஆடோமிடின்' என்னும் மருந்தைக் கண்டுபிடித்திருக்கின்ருர். அடோமிடின் என்பது அடோமிக் அயோடின் என்பதைச் சுருங்கச் சொல்லும் பதமேயாகும். இவ்வரிய மருந்தைக் கண்டுபிடித்த நம் பெரியாருக்கு உலகத்தார் என்ன கைம்மாறு செய்ய வல்லார். நியூயார்க் அமெரிக்கன் பத்திரிகையின் சாஸ்திரப் பகுதி ஆசிரியர் ஸ்ரீ. பிரான்சிஸ் டீட்கார்ட் இம்மருந்து ரசாயன சாஸ்திரம், மெரியா மெடிகா முதலியவற்றையும் மிஞ்சியாதா யிருக்கின்றதெனப் புகழ்படக் குறிப்பிட்டிருக்கின்ருர். டாக்டர் பிஸே அயோடினிலுள்ள விஷத்தன்மை பொருந்திய அம்சத்தைச் சுத்தி செய்வதற்கேற்ற முறையைக் கண்டு பிடித்து, அதனைத் தண்ணீரில் கரையக் கூடியதாக்கி, அது தண்ணீருடனுவது அல்லது மனிதனுடைய தேகத்திலுள்ள திரவப் பொருள்களுடனுவது சம்பந்தப்பட்ட உடனே தன் அபாரமான வேலையைத்துவக்கி மனிதனுடைய தேகத்திற்கு ஒருவித கெடுதியுமின்றி நோய்க்கிருமிகளனைத்தையும் பூண்டோடு ஒழிக்கும் தன்மையதான அரிய ஔஷதமாக்கி யிருக்கின்ருர். இதன் அருங்குணங்கள் முன்பே பல விடங்களில் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. டாக்டர் பிஸே நீடுவாழ்க. தமிழ்நாடு.

நட்டாஜி

அல்லது

சிவாஜியின் சேனைத் தலைவன்

2-ம் அத்தியாயம்

திருமண ஊர்வலம்.

(590-ம் பக்கத் தொடர்ச்சி.)

காலம் பல கடந்து விட்டன. நாழிகைகள் நாட்களாகி, நாட்கள் மாதங்களாகி மாதங்கள் வருஷங்களாய் விட்டன. இவ்விதம் காலங்கழியக் கழிய உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களிடத்திலும் எத்தனையோ மாறுதல்கள் காணப்படுவது இயற்கையன்றோ. இப்போது வருஷங்கள் ஆறு ஆய்விட்டன. இந்த ஆறு வருஷத்தில் மகாராட்டிரர்களின் சுதந்தர உணர்ச்சியும் பன்மடங்கு அதிகமாய் விட்டது. கடவுள் ஒரு ஒப்பற்ற தலைவரை அனுப்பப் போகிறார் என்று அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் வேரூன்றி விட்டது. இப்போது, அவர்கள், "அந்தத் தலைவர் மகாராட்டிர தேசத்தில் எவ்விடத்திலேயோ அவதாரம் செய்திருக்கிறார். சுதந்தரப் போருக்காக அவர் வெளிப்படும் காலம் சமீபித்திருக்கிறது" என்று ஊரெங்கும் பேசிக் கொள்கிறார்கள். கத்தியும் கேடயமும் தாங்கி போர்களஞ் சென்று தங்கள் தாய் நாட்டின் சுதந்திரம் சுயமரியாதைகளுக்காகப் போராடி இரத்தத்தைச் சிந்த அவர்கள் ஆவலாயிருக்கிறார்கள். இது நிற்க. நாம் ஆற்றங்கரையில் அன்றுமாலையில் கண்ட நட்டாஜி, கங்காபாய், காஷிபாய் ஆகிய இம்மூவரும், கடந்த ஆறு வருஷங்களுக்குள் நிரம்ப மாறுபாடு அடைந்து இருக்கிறார்கள். அவர்களின் உருவத்திலும், அழகிலும், அறிவிலும் நடை உடை ஒழுக்கங்களிலும் அனேக மாறுபாடுகள் காணப்படுகின்றன. அப்போது பன்னிரண்டு வயதுள்ள சிறுவனாயிருந்த நட்டாஜி இப்போது பதினெட்டுவயதுடைய வாலிபனாகவளர்ந்து விட்டான். முன்னைவிட இப்பொழுது அதிக உயரமாகவும் பலமுள்ளவனாகவும் தைரியமுடையவனாகவும் காணப்படுகிறான். வாலிபப் பருவத்தின் இயற்

கை அழகு அவனிடத்தில் காணப்படுகிறது. ஒன்பது வயதுள்ளவளாயிருந்த அவன் தங்கை கங்காபாய் இப்போது பதினைந்து வயதுடைய கன்னிகையாய் ஒருகணவனை மணஞ்செய்து கொண்டு இல்வாழ்க்கையில் நுழையும் வயதையடைந்து விட்டாள். அவளுக்குக் கலியாணம் முடிக்க அவள் பெற்றோர்கள் முயற்சிசெய்து தகுந்த இடத்தில் வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்து விட்டார்கள். செல்வந்தப் பிரபுவான தாதாஜியின் அருமை மகள் காஷிபாய் இப்போது பதின்மூன்று வயதடைந்து கட்டழகுடன் காணப்படுகிறாள். ஆற்றங்கரையில் கைகோத்து விளையாடி நெருங்கிய நண்பர்களாகவிருந்த இவர்கள் இப்போது ஒருவரோடொருவா வார்த்தையாடுவதும் இல்லை. "மகம்மதிய சிப்பாய்களைக் கொன்று போட்டால் உன்னைக் கலியாணம் செய்து கொள்வேன்" என்று நட்டாஜியைப் பார்த்து விளையாட்டாகப் பேசிய அச்சிறு காஷிபாய் இப்போது அவனைக்கண்டால் வெட்கத்தால் நாணங்கொண்டு வீட்டில் ஓடி மறைந்து கொள்கிறாள். இவ்விதம் வயதுக்கேற்றபடி உருவம், அழகு, அறிவு, செய்கைகள் எல்லாம் மாறுபடுவது இயற்கையாதலால் நாம் இவர்களைக் கண்டு அதிசயப்பட வேண்டியதில்லை.

ஆம். நட்டாஜியின் சகோதரி கங்காபாய்க்கு அவள் பெற்றோர்கள் கலியாண ஏற்பாடுகள் செய்து விட்டதாகச் சொன்னோமல்லவா? சௌக்கிராமத்திற்குச் சற்று தூரத்திலுள்ள வடகானே என்னும் ஊரில் தகுந்த குடும்பத்தில் பிறந்த ஒரு மாப்பிள்ளைக்கு அவளை மணஞ் செய்து கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். கலியாண நாளும் நெருங்கிவிடடது. கலியாணப் பெண்ணை மணக்கோலத்துடன் ஊர்வலமாக வடகானேக்கு அழைதது்க் கொண்டு போக வேண்டியது பெண் வீட்டார் கடமை. கலியாணப் பெண்ணை ஊர்வலமாக அழைத்துக் கொண்டு போவதற்காக அவள் தகப்பனார், உறவினர் நண்பர்களுடன் கலந்து யோசனை செய்தார். பீஜப்பூர் அரசாங்கத்தின் கொடுங்கோலாட்சியில் சிப்பாய்களின் அட்டூழியங்களும் வழிபறிக் கொள்ளைக்கார்களின் கொடுமைகளும் எல்லோருக்கும் நன்கு தெரியுமாதலால், அவர்கள் ஊர்வலத்தைத் தகுந்த பாது

காப்புடன் நடத்த வேண்டு மென்று யோசித்துச் சில வீரர்களைத் தற்பாதுகாப்புக்காகத் தங்களுடன் அழைத்துச் செல்ல வேண்டு மென்று தீர்மானித்தார்கள். நட்டாஜியின் தகப்பனார் செல்வந்தரு மல்ல. ஆகவே போதுமான ஆட்களை அழைத்துக்கொள்ள அவரால் முடியவில்லை. ஆனால், சில நண்பர்களும் உறவினர்களும் ஊர்வலத் துடன் பாதுகாப்பாகச் செல்ல உடன் பட்டார்கள். நியமிக்கப்பட்ட இந்த வீரர்கள் குதிரையின் மேல் சவாரி செய்தனர். அவர்கள் கையில் ஈட்டியும் அரையில் வாளும் காணப்பட்டன. மணமகளின் தமயனான நட்டாஜியும் குதிரை வீரர்களில் ஒருவனாகக் காணப்படுகி றான். அவன் கையில் ஈட்டி பிடித்து கம்பீரமாகக் குதிரையின் மேல் அமர்ந்திருக்கிறான். அவன் இடது பக்கத்தில் ஒரு நீண்ட வாள் தொங்கிக் கொண்டிருந்தது. ஊர்வலத்துடன் செல்ல வேண்டியவர்கள் அனைவரும் குறித்த நேரத்தில் வந்து விட்டார்கள். ஊர்வலம் புறப்பட்டு விட்டது. கலியாணப் பெண்ணாகிய கங்கா பாய் அழகாய் அலங்கரிக்கப்பட்ட ஒரு பல்லக்கில் அமர்ந்திருக்கிறாள். அவள் அழகாக அலங்கரித்துக் கொண்டிருந்தாலும், பல்லக்கின் இரு புறத்திலும் பச்சை நிறமான திரைச் சீலைகள் தொங்கவிடப்பட்டிருப்ப தால் அவளை நன்றாகக் காண முடியவில்லை. ஊர்வலத்தின் முன் னும் பின்னும் குதிரை வீரர்கள் சவாரி செய்கின்றனர். இவ்விதம் ஊர்வலம் போர் கோலத்துடன் வடகானை நோக்கிப் புறப்பட்டுச் சென்றது.

நீண்ட பெரும் பாதை வழியே ஊர்வலம் சென்று தௌரி ஆறு. பாதாள கங்கை என்னும் ஆற்றுடன் கலக்கிற இடத்தில் வலது பக்கமாகப் பாதைவழியே சென்றது. பாதை வளைந்து செல்லுகிற அவ்விடத்தில் இவர்கள் போகும் போது அந்தோ! திடீ ரென்று மகம்மதிய சிப்பாய்கள் இவர்களுக்கு முன்பாகத்தோன்றி னர். சிப்பாய் கூட்டத்தார் வாளும் துப்பாக்கியும் வைத்திருந்தனர். சேனைக் கூட்டத்தைக் கண்டதும் ஊர்வலக் கூட்டத்தார் திடுக் கிட்டனர். அவர்கள் என்ன செய்வதென்று ஒரு நிமிஷம் யோசிப் பதற்குள், ஆடம்பரமாக உடுத்திக் கொண்டிருந்த சிப்பாய்களின்

தலைவன் இச்சிறு கூட்டத்தாரைப் பார்த்து “ ஓடினுல் துப்பாக்கி யால் சுடப்படுவீர்கள், ஜாக்கிறதை ” என்று அதிகாரத்துடன் உரத்த குரலாகச் சொன்ஞன். அவன் சொல்லியதற்கேற்ப முகம் மதிய சிப்பாய்கள் துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்துச் சுடுவதற்கு ஆயத்தமாக நின்றனர். சிறு கூட்டத்தார் பெருங்கூட்டத்துடன் என்ன செய்ய முடியும் ? சிப்பாய்களுக்கோ துப்பாக்கி இருக்கிறது. துப்பாக்கியுடன் ஈட்டியும் வாளும் போராடமுடியுமா ? ஊர்வலத் தார் செய்வ தென்னவென்றறியாமல் திகைத்தனர். அவர்களின் நோக்க மெல்லாம் தங்களைப்பற்றியல்ல ; கலியாணப் பெண்ணை எவ்விதமாகிலும் சிப்பாய்கள் கையில் அகப்படவிடாமல் தப்பிவைக்க வேண்டும் என்பதே. பல்லக்கைச் சுமந்திருந்தவர்கள், புதர்களுக்கு மறைவில் புகுந்து கலியாணப் பெண்ணை பல்லக்குடன் எடுத்துக் கொண்டு கிராமத்துக்குத் திரும்பிவிடலாம் என்று எண்ணி சமயம் பார்தது செடிகளுக்கிடையே புகுந்தோடினர். உடனே துப்பாக்கி வெடிகள் கேட்டன. பல்லக்குச் சுமந்திருந்தவர்களில் ஒருவனுக்கு உயிர் உடலை விட்டுப் பறந்தது. அவன் கீழே விழுந்து பிணமாஞன். மற்றவர்களும் காயமடைந்து வீழ்ந்தனர். பல்லக்கு அலங்கோல மாய் கீழே விழ இவற்றை யெல்லாங் கண்ட கலியாணப் பெண கங்காபாய் பயந்து நடுங்கினுள். நல்லகாலமாக பல்லக்கு விழுந்ததால் அவளுக்கு யாதொரு காயமும் உண்டாகவில்லை. பல்லக்கு கீழே விழுந்ததைக் கண்ட நட்டாஜி உடனே குதிரைமேலிருந்து குதித்து ஓடி தன் சகோதரிக்கு என்ன நேரிட்டதோ வென்று ஆவலாகப் பார்த்தான். அவளுக்கு யாதொரு காயமும் உண்டாக வில்லை என்பதையும் அவள் பயத்தினுல் நடுங்கிக் கொண்டிருக்கிறுள் என் பதையும் அறிந்து நட்டாஜி அவளுக்குத் தேறுதல் கூறினுன். தான் இருக்கும் வரையில் அவளுக்கு ஒரு ஆபத்தும் நேரிடா தென்றும் ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை என்றும் ஆறுதல் சொல்லி அவ் விடத்திலேயே நின்று கொண்டான்.

இதற்குள்ளாகக் குதிரை வீரர்களுக்கும் சிப்பாய்களுக்கும் சண்டை மூண்டு விட்டது. இருவரும் கைகலந்து தாக்கினர்.

சிப்பாய்கள் துப்பாக்கியால் சுட்டார்கள். சிலர் தப்பி யோடினர் சிலர் உயிர் துறந்தனர். சிலர்காயமடைந்தனர். ஆனல் இந்தச் சண்டை சில நிமிஷங்களுக்குள் அடங்கி விட்டது. ஊர்வலத்துடன் வந்த வீரர்களும் ஜனங்களும் உயிர் துறந்தும் காயமடைந்தும் போனர்கள். உயிருடன் தப்பிச் சென்ருேர் வெகு சிலரே. முகம் மதிய சிப்பாய்களுக்கு யாதொரு சேதமும் உண்டாகவில்லை ஆனல் நட்டாஜி மாத்திரம் இன்னும் பல்லக்கின் அருகிலேயே நிற்கிருன். தன் உயிர் உள்ளவரையில் தன் சகோதரியை முகம்மதியர்கையில் சிக்கவிடக் கூடாதென்று உறுதியுடன் தன்கையில் வாளையுருவிக் கொண்டு வீரத்துடன் நிற்கிருன். இச்சமயத்தில் ஆடம்பரமாக உடுத்திக் கொண்டிருந்த தளகர்த்தன் நட்டாஜியின் அருகில்வந்து "தம்பி! நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்! இன்று முதல் உனக்கு நல்ல அதிர்ஷ்டம். உன் சகோதரி பீஜப்பூர் சமஸ்தானத்திலுள்ள ஒரு கனவானைக் கலியாணம் செய்து கொள்வாள். நீ வீரமுள்ள வாலிபனுயிருக்கிறபடியால் பீஜப்பூர் ராணுவத்தில் நீ தகுந்த உத்தி யோகம் பெற்றுச் சுகமா யிருக்கலாம். ஆனல் நீ இஸ்லாம் மதத்தில் சேர்ந்துவிட வேண்டும். நல்லது உன்வாளை உரையில் போட்டுக் கொண்டு என்னுடன்வா" என்று நட்டாஜியைப் பார்த்துப் பேசினன்.

தன் சகோதரி ஒரு முகமதியனைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்றும் தன்னை முகமதியனுக வேண்டும் என் றும் அத்தளகர்த்தன் சொன்ன சொற்கள் பழுக்கக்காய்ச்சிய நாராசம் போல் நட்டாஜியின செவியில் நுழைந்தன. அவன் மனம் தீப் போல் எரிந்தது. கண்களில் அனல் பறந்தது. உடனே தன்னை யும் தன்சகோதரியையும் இவ்வாறு அவமதித்துப் பேசிய அந்த முகம் மதிய வீரன் மேல் நட்டாஜி புலிபோல் பாய்ந்தான். தளகர்த்த னுடைய மார்பில் நட்டாஜியின் கூர்மையானவாள் குறிதப்பாமல் ஆழமாகப் பாய்ந்து விட்டது. உடனே தளகர்த்தன் அடியற்ற மரம்போல் வீழ்ந்தான். நட்டாஜீ இரண்டா முறையும் ஆத்திரத் தோடு அவன் மார்பில் குத்திய போது அவன் உயிர் விண்ணுலகஞ்

சென்றது. அவன் அசைவற்றுப் பிணமானுன். இது இரண்டொரு நிமிஷத்திற்குள் நடந்தது. நட்டாஜீ இவ்வளவு துணிவாகவும் தைரியமாகவும் எதிர்ப்பா னென்று தளகர்த்தனுவது சிப்பாய்களாவது கனவிலும் நினைக்கவில்லை. தங்கள் தலைவன் தாக்கப்பட்டுக் கீழே விழுந்ததைக் கண்ட சிப்பாய்கள் ஆச்சரியமும் கோபமுமடைந்து ஓடிவந்தார்கள். தங்கள் தலைவன் பிணமாய்க் கிடப்பதைக் கண்டதும் அவர்களில் சிலருக்கு அடங்காக் கோபம் உண்டாய் விட்டது. மற்றவர் ஆச்சரியத்துடன் ஒன்றுந் தோன்ருமல் திகைத்து நின்றனர். ஆத்திர மடைந்த சிப்பாய்கள் கடுங்கோபத்துடன் நட்டாஜீயைத் தாக்கினுர்கள். நட்டாஜீ அவர்களுக்குச் சிறிதும் பின்னடையவில்லை. சிப்பாய்களோடு வீரமாக எதிர்த்து நின்று போர் செய்து இன்னும் இரண்டுபேரை தன் கூர்மையான வாளால் கொன்று வீழ்த்தினுன். ஆனுலும், பலர் முன் ஒருவன் ஊடாடுவது இயலாதல்லவா ? அவ்ன் எவ்வளவு சாமர்த்தியமாகவும் வீரமாகவும் போர்செய்தும் அவனுக்கும் பலத்த காயங்கள் உண்டாயின. அவற்றையும் பொருட் படுத்தாமல் அவர்களுடன் போராடிக் கொண்டிருந்த போது பின்புற மிருந்த ஒரு சிப்பாய் தன் துப்பாக்கியைத் தலை கீழாகப்பிடித்து ஓங்கி அவன் மண்டைமேல் அடித்தான். நல்ல வேளை ! நட்டாஜியின் மண்டை இரண்டாகப் பிளந்திருக்கும். ஆனுல், அந்த அடி குறி தப்பி நட்டாஜியின் பின் கழுத்தில் வீழ்ந்தது. உடனே அவன் மூர்ச்சித்துக் கீழே விழுந்து பிணம்போலானுன். சிப்பாய்கள் அவன் இறந்து விட்டான் என்று நினைத்தார்கள். ஆனுல், அவர்களில் ஒருவன் " கடைசியாக அவன் மார்பை இதோ பிளந்து விடுகிறேன் பார் !" என்று சொல்லிக் கொண்டே தன் வாளை ஓங்கினுன். அச்சமயம் அங்கு வந்த இராணுவ உத்தியோகஸ்தன் அவனைப் பார்த்து " வாளை உறையில் போடு. இறந்து போனவனைக் கொல்வது வீரனுக்கு ஆண்மைத் தனமல்ல " என்று சொல்லித் தடுத்தான்.

இப்படிச் சொன்ன அந்த இராணுவ உத்தியோகஸ்தன் பெயர் " **ரஸ்ட்ரம் சூமான்** "என்பது, இவன் இறந்துபோன தளகர்த்த

னுக்கு அடுத்தபடியுள்ள உத்தியோகஸ்தன் இவன் கட்டளைப்படி சிப்பாய்கள் கீழ்படிந்து நடக்கவேண்டும். தங்கள் தலைவனைக் கொன்று போட்ட நட்டாஜியைக்கொல்வதைத் தடுத்த ரஸ்ட்ரம் சூமானைப் பார்த்து அந்த சிப்பாய் "நீர் சொல்வது என்ன ? அந்தப் பயல் இன்னும் சாகவில்லை. அவனைச்சும்மா விடக்கூடாது, நமது தலைவனையே கொன்றுபோட்ட இச்சிறுவன் தைரியத்தையும் துணிச்சலையும் நீர் பார்க்கவில்லையா ? இப்படிப்பட்டவனை உயிருடன் விட்டுவைத்தால் மகாராட்டிரர்க்குள் இவன் ஒரு பெரிய வீரனாகிவிடுவான்." என்று ஆத்திரத்துடன் பேசினர்.

வாலிபனாயிருந்தும் நட்டாஜி காட்டிய வீரத்தனத்தையும் தன் சகோதரியைக் காப்பாற்றும் பொருட்டு தன் உயிரையும் பொருட்படுத்தாமல் பல பேரை எதிர்த்துத் தான் ஒருவனாகப் போராடிய துணிவையும் கண்ட ரஸ்டரம் சூமானுக்கு அவன்மீது ஒருவித இரக்கமும் அன்பும் உண்டாயின. ஆகவே அவனை எப்படியாவது காப்பாற்றவேண்டுமென்று உறுதிகொண்டான். அதனால்தான் அந்த வீரனை அவன் தடுத்தான். அந்த சிப்பாய், நட்டாஜியைக் கொல்லவேண்டுமென்று வற்புறுததிய போது அவனை வேறுவிதமாகச் சமாதானப் படுத்தினன். "செத்துப்போனவன் எப்படிப் பிழைப்பான். இப்பொழுது நீ அவனை உன் வாளால் குததினல், உன்னை மற்றவாகள் செத்த பாம்பை யடிக்கும் சிப்பாய் என்று சொல்லி நகைப்பார்கள்" என்று ரஸ்ட்ரம் சூமான் அவனுக்கு சொல்லி சமர்தானப் படுத்தினன, இந்த வார்த்தைகள் அந்த சிப்பாய்க்கு ஒரு விதத்தில் நியாயமாகத் தோன்றிய படியாலும் தன் தலைவன் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டியதனாலும் அவன் வாளா யிருந்து விட்டான்.

* * * *

நல்ல வேளையாய், ரஸ்ட்ரம் சூமான் உதவியால், நடடாஜீ அன்றையத் தினம் உயிருடன் விடப்பட்டான். பிணம்போல் அசைவற்றிருந்த நட்டாஜீ எவவளவு நேரம் அவ்விதம் மூர்ச்சையடைந்திருந்தானென்று அவனுக்குத் தெரியாது. தான் மூர்ச்சையடைந்ததற்குப் பின்னர் என்ன நடந்ததென்றும் அவன் அறியான், அவ

னுக்குச் சிறிது உணர்வு பிறந்து மெல்ல தன் கண்களைத் திறந்து பார்த்தபோது எங்கும் இருள் சூழ்ந்திருப்பதையும் தான் மண்மேல் வீழ்ந்து கிடப்பதையும் கண்டான். வானத்தில் நட்சத்திரங்கள் வைரக்கற்கள் போல் மின்னிக் கொண்டிருக்கின்றன. அப்பொழுது, அன்று ஊர்வலம் புறப்பட்டது முதல் தான் சிப்பாய்களுடன் போராடியது வரையில் எல்லாம் ஒன்றின்பின் ஒன்ருய் அவன்மனதில் தோன்றியது, உடனே தன் சகோதரியின் கவனம் வர, அவன் தன்தலையைத தூக்கி தன்சகோதரி அங்கிருக்கிருளா என்று பார்த்தான். இருளாயிருந்த போதிலும் நட்சத்திரங்களின் சிற்றொளியால் அங்கு ஒருவரும் இல்லை என்பதையும் தான்மாத்திரம் அனுதியாய் அங்கு கிடப்பதையும் அறிந்தான். உடனே அவனுக்குப் பெரிய சந்தேகம் உண்டாய் விட்டது. தன் சகோதரி தப்பித்துக் கொண்டு தன்வீடுபோய் சேர்ந்தாளா அல்லது முகம்மதியச் சிப்பாய்களின் கையில் அகப்பட்டுக் கொண்டாளா என்னும் எண்ணம் அப்போது அவன் மனத்தில் வாள் போல் அறுத்தது. துஷ்டர்களான முகம்மதியரிடத்தில் அவள் சிக்கி யிருந்தால் அந்தோ! அவள் அவர்களால் என்னென்ன துன்பங்களை யடைந்தாளோ என்று அவன் நினைத்தபோது அவன்மனம் துடித்தது. அவன் கண்களில் நீர்பெருகிற்று. தன் வீடு சென்று அங்கு அவள் இருக்கிருளா என்று பார்க்க வேண்டும் என்றும் தன்தாய் தந்தையர் எப்படி வருந்திக் கொண்டிருக்கிருர்களோ என்றும் நினைத்து அவர்களைக் காண வேண்டும் என்றும் எண்ணங் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். அப்பொழுதுதான், தான் அதிக பலயீனமடைந்திருப்பதையவன் அறிந்தான். உடம்பில் பல இடங்களில் காயம் பட்டிருந்ததனுல் வலி அதிகமாயிருந்தது. காயங்களின் வழியாய் அதிகமாக இரத்தம் ஒழுகிப்போய் விட்டபடியால் உடம்பில் பலக்குறைவு உண்டாயிருந்தது. மிகுந்த கஷ்டத்துடன் எழுந்து தத்தித்தள்ளாடி தன் கிராமத்தை நோக்கி நடந்தான். மெல்ல மெல்ல நடந்து இடை யிடையே வழியில் உட்கார்ந்து கடைசியாகத்தான் வீடு போய்ச் சேர்ந்தான் அவன் வீடு போய்ச் சேர்வதது வெகு நேரம் சென்றபடியால் கிராமத்திலுள்ள எல்லா வீடுகளிலும் கதவு அடைக்

கப் பட்டுச் சந்தடியற்றிருந்தன. தன் வீட்டையடைந்தபோது தன் தாயுந் தந்தையும் ஊணுறக்கமின்றிப் பலவாறு புலம்பி அழுது கொண்டிருப்பதைக் கண்டான், அவர்கள், அன்றைதினம் தங்கள் குடும்பத்தில் நேரிட்ட பெரிய விபத்தைப்பற்றிச் சிந்தித்து மனம் வெதும்பினுர்கள். தங்கள் உயிர் நிலைபோன்ற ஒரே பெண்ணையும் பிள்ளையையும் பரிகொடுக்கும்படி நேரிட்டதே என்று பலவாறு எண்ணிப்புலம்பினுர்கள். தங்கள் பெண்ணும் பிள்ளையும் உயிருடன் இருக்கிருர்களோ அல்லது இறந்து விட்டார்களோ, ஒருவேளை கொடிய மூடர்களான முகம்மதிய சிப்பாய்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு என்னென்ன கஷ்டங்களை அடைந்தார்களோ என்று ஒன்றும் தெரியாதவர்களாய் அலைகடலில் அகப்பட்ட துரும்பு போல மனம் புழுங்கித் தேங்கினுர்கள். "நட்டாஜி, கங்கா, கண்மணீ" என்று அவர்கள் வாய்விட்டு அரற்றிய காட்சி எத்தகைய கல்மனத்தையும் கரைத்துவிடக்கூடியதாயிருந்தது. அவர்கள் கண்களிலிருந்து நீர் ஆருகப் பாய்ந்தது, மனம் அனல்பட்ட மெழுகு போல் உருகிற்று. அவர்களின் துக்கக் காட்சி மிகவும் பரிதாபமாகக் காணப்பட்டது.

இவ்விதம் எண்ணுத எண்ண மெல்லாம் எண்ணி எண்ணி மனம் புண்பட்டு வருந்தித் தவிக்கும் பெற்ருேர் முன் நட்டாஜி சோர்வுடன் நின்ருன். அவர்கள் துக்கக் காட்சியைக் கண்டு இவனுக்கும் தன்னையறியாமலே சொல்லொணு துக்க முண்டாய் விட்டது. அவன் நாகுழறியது. ஒன்றும் பேசாமல் வாளாநின்ருன். எதிர்பாராவண்ணம் அவன் அவர்கள்முன்னிலையில் சென்றபோது ஓ! அப்பெற்ருேர்க்குண்டான ஆனந்தத்திற்கு அளவுண்டோ? அவனை அன்புடன் கட்டித்தழுவி ஆனந்தக் கண்ணீர் விட்டார்கள். துக்கத்தினுல் கண்ணீர் விட்ட அவர்கள் ஆனந்தக் கண்ணீர் விட்டார்கள். துக்கத்தினுல் உருகிய அவர்கள் மனம் அப்பொழுது அன்பினுல் உருகியது. அவர்கள் ஆச்சரியத்தினுலும் சந்தோஷத்தினுலும் தங்களை மறந்து நின்ருர்கள்.

நட்டாஜி, கங்காபாய் எங்கிருக்கிருள் என்று தன்பெற்ருேர்களைக் கேட்டான். அவள் எங்குசென்ருளென்றும் எப்படியாளு

ளென்றும் ஒன்றும் தெரியவில்லை என்றும் பல இடங்களிலும் தேடிப் பார்க்கும்படி ஆட்களை அனுப்பியிருப்பதாகவும் சொல்லி அவன் எப்படித் தப்பி வந்தானென்றும் அவ்வளவு நேரம் எங்கிருந்தா னென்றும் அவனுக்குண்டான காயங்களைப் பற்றியும் ஆவலாகக் கேட்டார்கள். அதற்கு நட்டாஜி, முகம்மதியர்கள் துப்பாக்கியால் சுட்டதும், பல்லக்கு கீழே வீழ்ந்ததும், தான் கங்காபாய்க்குக் காவலாக நின்றதும் பிறகு சேனைத்தலைவனைக் கொன்று வீழ்த்தியதும் தான் அடியுண்டு மூர்ச்சையாகி வீழ்ந்து விட்டதையும் ஒன்று விடாமல் சொல்லி, தான் மூர்சையடைந்த பிறகு அங்கு நடந்த விஷயங்கள் தனக்குத் தெரியா தென்றும் கங்காபாய் தப்பித்துக் கொண்டிருப்பாள் என்று நினைக்க வழியில்லை என்றும் பெரும்பாலும் அவள் முகம்மதியர்கையில் சிக்கிக்கொண்டிருப்பாள் என்றும் சொல்லி அவளுக்காக மனம் வருந்தி கண்ணீர்விட்டான். இவைகளை யெல்லாம் கேட்ட அவர்களுக்குத் துக்கம் பெருகியது. தங்கள் அருமை மகள் முகம்மதியர்களால் கொண்டுபோகப்பட்டாள் என்று அவர்கள் முடிவாகத் தீர்மானித்தார்கள். மீண்டும் அவர்கள் மனதில் துக்கம் மூண்டெரிந்தது "ஐயோ! கடவுளே! என் கண்மணி கங்காபாய், முகமதியர் கையிலா அகப்பட்டுக்கொள்ள வேண்டும்! ஐயோ! அவள் என்னென்ன துன்பங்களை அனுபவிக்கிறளோ அவள் மனம் எப்படி ததளிக்கிறதோ! தெய்வமே தெய்வமே. நீதான் அவளைக் காற்பாற்ற வேண்டும்" என்று அவள் தாய் வாய் விட்டு அலற்றிப் புலம்பினுள்.

நட்டாஜி களைப்பினுலும் துக்கத்தினுலும் மிகவும் வாடியிருந்தான். அவனுடைய காயங்களை வென்னீரினல் கழுவித் துடைத்து எண்ணெய் தடவினுர்கள். பின்னர் உணவு பரிமாரப்பட்டது. தன் சகோதரிக்கு நேர்ந்த கதியை எண்ணி யெண்ணி அவன்மனம் துக்கத்தில் மூழ்கியிருந்தபடியால் அவன் உணவு சாப்பிட மனஞ் செல்லவில்லை. அவன் பெற்றோர்கள் செய்த கட்டாயத்தினல் அவன் சிறிது உண்டான். பிறகு அவன் மிகுந்த இளைப்படைந்திருந்த படியால் தன்னை மறந்து அயர்ந்து உறங்கி விட்டான் ஆனல் அவன் பெற்றோர்கள் அன்று சாப்பிடவும் இல்லை கண்ணுறங்கவுமில்லை.

(தொடரும்.)

பெரியபுராணப்

பெண்ணரசிகள்

பண்டிதை அசலாம்பிகை அம்மாள் எழுதியது.

தமிழ் மொழிக்கும் சைவ சமயத்திற்கும் பெரும் பேருக விளங்கும் திருத்தொண்டத் தொகையினுள் காணப் படும் மாதரசிகளைப் பற்றித் தனித்தனி ஆராய்ந்து உணர் தல் சகோதரிகளுக்கு மிகவும் நன்மை தருவதாகும். சம யப்பற்று கருதி இக்கட்டுரை வரையவில்லை. அம்மடநல் லாரின் இயற்கையான மாண்குணங்களையும் கடமைகளை யும் தேர்ந்து பின் பற்றுவதே முற்றிய நோக்கமாகும்.

இத்தொண்டர் புராணத்தினுள் பெண்ணீர்மை குன் ருப் பெருந்தன்மை வாய்ந்த பலருள்ளும் சிறப்பாகச் சிலரை எடுத்துக் கொள்வோம்.

> "விறல் மந்திரி மதியுடையாள் பெண்"

என ஔவைப் பிராட்டியார் அருளிய தெய்வத்திருவாக் கியத்திற் சிலக்கியமாக விளங்கிய மங்கையர்க் கரசியாரையும்

> "பேதமையென்பது மாதர்க்கணிகலம்"

எனும் ஷை ஔவையார் அருண்மொழியின் நுண்பொருளை யுணர்த்தும் விருத்தியுரை போன்றும் நீறு பூத்த நெருப்புப் போன்றும்

> "நாம் பெரிய ரென்னுமதை நாடாதிருக்குமவர்
> தாம் பெரியர் என்று மறை சாற்றியிடும்"

என்ற ஆன்ருேர் வாக்கிற் கிலக்கியமாகவும் விளங் கிய காரைக்காலம்மையாரெனும் புனிதவதியாரையும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் கூட்டி வரையப்பட்டி ருப்பது ஒன்றே அவ்வனிதாரத்தினங்களின் மாண்புகளுக் குப் பேருதாரணமாகும்.

இவர்களையன்றி பிறவித்துறவு பூண்ட திலதவதியாரையும்,

உறுதிகுன்று வொழுக்கமுடையராய் இளமைதுறந்த திருநீலகண்ட நாயனாரின் மனைவியாரையும்,

"கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்னும் அருந்தொடரின் கருத்தைச் செயலில் மேற்கொள்ளத் துணிந்த இயற்பகை நாயனாரின் மனைவியாரையும்,

"இல்லாளகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்னும் பழமொழியை விழுமியதாகிய இளையான்குடிமாற நாயனாரின் இல்லுறை தெய்வத்தினையும் முறையே ஈண்டு ஆராய்வோம்.

இவர்கட்கெனத் தனிமையான முதன்மை பெரிய புராணத்தினுள் வழங்கப்படா விடினும் இவர்கள் ஒருமைப் பாட்டினாலேயே இவர்கள் கணவர்கள் கடமையாகக் கைப் பற்றிய தொண்டுகளில் முட்டின்றி வெற்றி பெற்றார்க ளென்பது வெளிப்படை.

இந்நுட்பம் கருதியும் இல்லறமே எவற்றினு மேம் பட்ட தென்பதை வலியுறுத்தவுமே திருத்தொண்டத் தொகை வகுக்கப்பட்ட வரிசையில் தில்லைவாழந்தணர் களுக்குப்பிறகு இம்மூவர் சரிதங்களையே முதன்மையாக அமைத்தனரோ வென்றும் ஐயுறவேண்டி யிருக்கின்றது. இனி முதலடியாராக வகுக்கப் பெற்ற திருநீலகண்ட நாயனாரின் மனைவியாரைப் பற்றி ஆராய்வோம்.

இவர் மண்ணினாற் பாண்டங்களை வனையும் கைத்தொழி லினராகிய குயவர் குலத்திற் பிறந்தவர். அத்தொழிலினைத் திறம்பட ஆற்றி யீட்டும் வருவாய் கொண்டே இல்லறம் நடாத்தியவர், தன் கணவர் ஓர் நாளிரவில் முறையல்லாத வழியில் சிற்றின்பத்தி லீடுபட்டதாக உணர்ந்தார்.

உணர்ந்தவுடன் மனைவியினிலைமையில் இயல்பா யெழும் பிணக்கிற்குள்ளானார். தன்னை யணுகவந்த நாயக ரைத் தடுத்து "என்னைத் தொடாதீர்" எனக் கூறவேண்

டியதற்கு மாறுகக் கோபத்தினுலோ சொற்றவறியோ "எம்மைத் தொடாதீர்" எனவும் கூறி அதற்குச் சான்ருகத் திருநீலகண்டத்தினை ஆணையாக நிறுவினுர். என்னே! இத் திருநீலகண்டத்தினை ஒழிவருது தனது நாயகர் உளத்திலும் நாவிலும் பதிந்து வழிபடும் நியமம் உணர்ந்தமை பற்றியே யென்க. இச்சொல் கேட்டதும் நாயனுரும் அஞ்சி விலகினுர்.

இத்தருணந் தொட்டு நாயனுர் உலகில் மனைவியாரின் பத்தினை துறந்தமையன்றி உலகில் எம்மை என்றமையால் மாதரின் பத்தினையே மறந்தார்.

இளமைப்பருவம் கடந்தனர். இறைவன் மொழிமீது நிறுவிய ஆணையைக் கடந்திலர். இவ்வம்மையார்க்கும் அவ்வாணையிடத்து மதிப்பும், ஸத்தியத்தில் உறுதியும் நாயகருக்குள்ளது போலவே உரம் பெற்றிருந்தமையாலன்ருே நாயனுரின் உறுதி நழுவாததாயிற்று. முற்றத் துறந்த பட்டினத்தடிகளாலும்,

> "மாது சொன்ன சூளாலிளமை துறக்க
> வல்லேனல்லேன்"

எனவிதந்து பொன் எழுத்துக்களிற் பொறிக்கப் பெற்றனர்.

நாயனுர் உறுதியை மனைவியார் கெடுக்க நினைந்திருப்பரோ? கெடுக்க எண்ணமாவது இல்லாள் அகத்தெழுந்திருந்ததாயின் பின்னர் ஒருகணம் ஒருமனப்பட்டு அயலறியாமல் இல்லறம் நடாத்தி யிருப்பரோ?

இல்லற மென்பது அறம் வளர்க்கும் நிலையமே யல்லது இயல்பாயெழும் இச்சையைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டாக மட்டில் ஏற்பட்ட தென்பதை இவ்வம்மையார் இனிது தெளிந்திருந்தார். இழிவான காமப்பேயின் ஆரவாரம் இப்பேரறிவினர்களிடம் ஆணையை மீறித்தலைகாட்ட ஆற்றலிலதாய் மறைந்தது. இவ்வொரு மெய்ப்பாட்டொருமையொழிய ஏனைய எல்லாக் கடமைகளிலும் வேறுபடாத உள்ளத்தினராகவே காலம் கழித்தனர் எனில் எவரே வியவாதார். கடவுளே வியந்தன்ருே உலகினருக் குணர்த்த

வேண்டி சிவனடியாராய்ப் போந்து திருவோடொன் றளித்துப் பாதுகாத்தளிக்கப் பணித்ததும், பின்னர் அவ்வோட்டினைச் சேமித்தவிடம் நின்ற கற்றியதும், அதனிமித்தம் வலிந்து வழக்கிட்டதும், தான்களவாடியதில்லை என்பதற் கற்குறியாக மனைவி காம் பற்றி நீரில் மூழ்கி உறுதிகூற வேண்டியதும், அவ்வாறே இசைந்த நாயனார் மனைவியைப் பரிசித்தற் கின்மையால் மூங்கிற்றண்ட மொன்றின் ஒரு தலையை மனைவியைப் பற்றச் செய்து மறுதலையைத்தான் பற்றி மூழ்க முயன்றதும், மனைவியின் காத்தைப் பரிசிக்க முடியாத இளமை நிகழ்ச்சியைப் பலருமறிய வற்புறுத்தலினால் வெளியிட நேர்ந்ததும், உடனே அடியாராய் வந்த பசுபதி இடபவாகனராய் வெளிவந்தருளி என்றுமாறாத இளமை பெற்று அணங்கினோடும் தன் பெரும்பதவியிலெய்தி இன்புறுமாறு பணித்து ஆட்கொண்டதும் என்றறிகிறோம்.

"தூற்றும் பெண்டிர் கூற்றெனத்தகும்" என்றார் மூதாட்டியார். குடும்பமர்மங்களை மனவமைதி யின்றி விளம்பரம் செய்யும் இழிவான குணம் இவ்வம்மையார்க்கு இல்லாமையினாலேயே மன நிலை காத்தனர். இன்றேல் இவர் உறுதியைச் சிதறடிக்கப் பலர் தலைப்படுவர். இவர் மனம் திரியுமேல் நாயனார் நிலைமையும் மாறுதிருப்பது கடினமாம். ஆகவே இத்தகைய பெரும் புகழுக்குக் காரணமாக வழுத்த வேண்டியவர் அவர் தம் மனைவியா ரென்பது வெளிப்படை.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாரிடை பரவையாருக் கேற்பட்ட பிணக்கு எத்துணை விரைவில் மறைந்தது. பிரணய கலகத்தை விட எளிதில் மறையக்கூடிய கலங்களே உலகிலில்லை. ஆனால் இவ்விருவருள்ளும் அத்தருணம் எழுந்த கோபம் உடனே மறைந்தது கொண்டே பிரியாவாழ்வு நடாத்தினர். ஸத்தியத்தினால் தடுக்கப்பட்ட சிற்றின்ப வேட்கையை இருவரும் பெறிதாக மதிக்கவில்லை யென்பதே தேற்றம், ஒவ்வொரு மாதரும் இம்மதிநல்லாரின் தூய்மையையும் வாய்மையையும் கூர்ந்து போற்றுவாராக.

(இன்னும் வரும்.)

தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பக நூலகம்
216368
600 008

கிளி

(ஸ்ரீமான் தேசிகவிநாயகம் பிள்ளை எழுதியது.)

தேமலர்ச் சோலையிலே—வாசமெழு
தென்றலுலாவையிலே
மாமணமங்கையைப்போல்—பெரிது
மகிழ்ந்து நீ தங்கினையோ? (1)

பச்சிலையும் கனியும்—நிறைந்து
படர்ந்து வளராலின்
உச்சியிற் சென்றிருந்தால்—எப்படியான்
உன்னையும் காண்பேனம்மா. (2)

நாடுமென்னுள்ளத்திலே—குடிபுகும்
நாயகி கையமர்ந்து
பாடியமுதளிக்கும்—அழகிய
பைங்கிளி நீயலவோ? (3)

பூனைகளிங்குவரா—வேடர்தம்
பொறியின் பயமுமில்லை
யானுனைக் காத்திடுவேன்—இறங்கி நீ
என்கையில் வந்திடாயோ? (4)

வட்டமாயுன் கழுத்தில்—ஒருநாளும்
வாடாத ஆரமதை
இட்டவராரடியே—எனக்கும்
இயம்புவையோ கிளியே. (5)

மாணிக்க மூக்கழகும்—மரகத
வர்ணவடிவழகும்
காணக்கண்ணாயிரந்தான்—இருப்பினும்
கண்டு முடிந்திடுமோ? (6)

கத்திரி போல வெட்டிக்—கனியினைக்
கௌவி யெடுத்தோடச்
சித்திரவாயளித்த—கடவுள்
திருவருள் சற்றே அம்மா. (7)

சாய்ந்து தலைவணங்கி—இனிய
தமிழை நீ கற்கு முறை
ஆய்ந்த புலவருமே—எழுதி
அயர்ந்து கைசோர்வரம்மா. (8)

பறக்கச் சிறகி ருந்தும்—மாக்கிளை
பற்றி நீ யேறுவதேன்
திறத்தை யுலகினுக்கு—மிகவும்
தெரிவிக்கவோ கிளியே. (9)

காட்டுத் தினைக்கதிரைப்—பறித்து நீ
கண்டித்தருந்தாமல்
கூட்டிற் கெடுத்தோடும்—குறிப்பெது
கூறுவையோ கிளியே. (10)

ஒற்றை யொருகாலில்—நின்றுகனி
உண்ணு மரிய வித்தை
கற்றதும் யாவரிடம்—அவரை நீ
காட்டுவையோ கிளியே. (11)

கானத்தினைப் புனத்தில்—குறமகள்
காவலிற் கொள்ளையிடல்
ஈனச் செயலல்லவோ—குலத்துக்
கிழுக்கமும் வந்திடாதோ ? (12)

செம்பவழ வாயைத்—திறந்து நீ
செப்பு மொழி கேட்கில்
உம்பரமுதமெலாம்—செவியகத்
தோடி யொழுகுமடி. (13)

கொம்பிற் கொலுவிருந்து—களித்து நீ
கூவுங் குரல் வருமேல்
பம்பியெழுஞ் சோலை—எனக்குப்
பரமபதமடியோ. (14)

உண்ணும் கனியிலெழும்—சுவையினை
உள்ளம் களிகொள்ளவே
பண்ணிற் கலந்திட நீ—தெரிந்து செய
பக்குவமேதடியோ ? (15)

கிளி

பேசு மரகதமே—உனைத்தினம்
பேணி வளர்த்திடுவேன்
ஆசையமுதமொழி—அளிக்க நீ
அண்டையில் வந்திடாயோ? (16)

பண்ணுக் கிசைந்ததம்மா—பழத்தொடு
பாலுங் கலந்ததம்மா
மண்ணுக்கமுதமம்மா—உனது செவ்
வாய்மொழி தத்தையம்மா. (17)

மாணிக்கச் செப்பினிலே—அமுதை
வடித்துச் சுவை பெருக்கி
பேணியுனக் களித்த—பிரமன்
பெரியன் பெரியனம்மா. (18)

சின்னஞ் சிறுபள்ளியில்—உனக்கொரு
சிங்கார பெஞ்சுமிட்டுத்
தின்னக் கனியளித்துப்—பாலபாடம்
செப்புவேன் வா கிளியே. (19)

கண்ணுக்கினிமையாகி—எனதிரு
காதும் குளிரச்செய்யும்
வண்ணப் பசுங்கிளியே—குயிலுமுன்
மாதவஞ் செய்ததுண்டே? (20)

பாலுக்குச் சீனியைப்போல்—பசுந்தமிழ்ப்
பாடலுக் கின்னிசைபோல்
சோலைக்குப் பைங்கிளியே—உனது
துணையும் பெரிதே யம்மா (21)

உள்ளக் களிப்பெழுந்து—வெளியில்வந்
துன்னுருக் கொண்டதுவோ?
மெள்ளப் பிடித்து நெஞ்சில்—அணைத்திட
வேட்கை மிகுதேயம்மா. (22)

சித்தந்தெளிந்திடுஞ் செய்வினையாவுந் திருத்தமுறும்
நித்தம் மறிந்தெழு செல்வமுந் தங்கிநிலைபெறும் நல்
முத்தர்க்குரிய பெரும்பதம் வாய்க்குமிம் மூதுலகில்
பத்தர்க்கருளும் திருமகள் பாதம் பணிபவர்க்கே.

ம து சா ர ம்

(காப்பிரைட்)

(ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது)

மனிததேகம் எதனுல் ஆக்கப்பெற்றது.

மனிததேகம் சூக்குமரந்திரங்களால் ஆக்கப் பெற்றது ஆகவே,

மதுசாரம் சூக்குமாந்திரங்களுக்கு விஷமாகும்.

Alcohal—a Cell Poison.

பிராணிகள் ஒரே சூக்குமரந்திரத்தாலும் பல சூக்குமரந் திரங்களாலும் ஆக்கப் பெற்றிருக்கின்றன.

சூக்குமரந் திரங்களாவதென்ன வென்பதைப் பின்வருவன வற்ருல் தெரிந்து கொள்வோம்.

கடற்கரையில் அல்லது வீட்டிற்குச் சமீபத்தில் சிறுபிள்ளைகள் மணல் வீடு கட்டியும், மணலை உயரமாகக் குவித்தும் விளையாடுகிருர்கள். அவ்வீட்டை அல்லது மணற்குவியலைத் தூரத்திலிருந்து பார்ப்பவர்கள், அது உறுதியான ஒரு பிண்டப் பொருளாக (One Solid Mass) விருக்கின்றதென நினைப்பார்கள்; ஆனுல், அம்மணல் வீட்டை அல்லது மணற்குவியலை அருகிலிருந்து பார்ப்பவர்கள், அது அளவிறந்த சிறுசிறு நுண்மணல்களின் மேல் மணல்கள் சேர்ந்து குவியலாகக் காணப்பட்டதெனத் தெரிந்து கொள்ளுகிருர்கள்.

ஒரு வீட்டைப் பார்க்கும்போது, அது உறுதியான ஒரே பிண்டப் பொருளாகக் காணப்படுகிறது; ஆனுல், அதனைக் கட்டும்போது அருகிலிருந்து பார்த்தவர்கள், அவ்வீடு, அளவிறந்த சிறு சிறு பொருள்களாலும், செங்கற்களாலும், கருங்கற்களாலும் மற்றப் பொருள்களாலுங் கட்டப்பட்டிருக்கிற தென்று நன்ருயறிவார்கள்; ஆயினும், அப்பொருள்களில் மனத்தால் மாத்திரம் எண்ணியறிந்து கொள்ளக்கூடிய கோடிகோடியான நுண்ணிய அணுக்கள் சேர்ந்திருக்கின்றன வென்று அறிதல் வேண்டும்.

அதுபோலவே, ஒவ்வொரு உயிருள்ள பொருளும் உறுதியான ஒரே பிண்டப்பொருளாகக் காணப்படினும், அப்பொருள் சூக்குமரந்திரங்களா லாக்கப்பட்டிருக்கின்றதேயாம். ஒவ்வொரு சூக்குமரந்திரமும் தெளிவாயும் தனித்தனியாயும் உயிருள்ளதாயு மிருக்கின்றது. அவ்வாறிருப்பினும், அது ஒரு உயிருள்ள முழுப்பொருளின் ஒரு பகுதியே யாகும். ஆகையால், ஒரு ஈ, ஒரு ஆலமரம், ஒரு யானை, ஒரு குரங்கு, ஒரு மச்சம், ஒரு நிலக்காளான் (A Toadslool) ஒரு மனிதன் இவை ஒவ்வொன்றும் வெறுங் கண்ணல் (Naked eye) பார்க்க முடியாத மிக்வும் நுண்ணிய உயிருள்ள சூக்கும ரந்திரங்களின் தொகுப்பான பொருளாகும்.

சூக்குமரந்திரம் இன்றியமையாத ஓரங்கம். The cell Unit,

ஆகவே, சூக்குமரந்திரமானது உயிருள்ள தாவரம் (plant) அல்லது பிராணியின் அமைப்பிற்கு இன்றியமையாத ஓர் அங்கமாகின்றது. ஒரு பையன் அல்லது ஒரு பெண் ஒரு பாடசாலையின் ஓர் அங்கமாகும். பாடசாலையின் வேலை பாடசாலையில் அடங்கியுள்ள ஒவ்வொரு பையன் ஒவ்வொரு பெண்ணின் வேலையைப் பொறுத்திருப்பதுபோல, ஒவ்வொரு உயிருள்ள தாவரமும் பிராணியும் வேலை செய்வதற்குச் சக்தியுண்டாதல் அத்தாவரத்தில் அல்லது பிராணியில் அமைந்திருக்கும் சூக்குமரந்திரங்களைப் பொறுத்திருக்கின்றன.

சில தாவரங்களும் பிராணிகளும் ஒரே சூக்குமரந்திரமுடையனவாயிருக்கின்றன. ஆனல், புல்லில் ஓர் தளிர் (blade of grass) ஒருமலர், ஒருபுதர் அல்லது ஒருமரம், ஒரு பொடிமச்சம், ஒரு இறால் அல்லது ஒரு திமிங்கிலம், ஒரு சுண்டெலி அல்லது ஒருயானை, ஒரு குரங்கு அல்லது ஒருமனிதன் இவைக ளொவ்வொன்றுங் கோடி கோடியான அளவிறந்த சூக்குமரந்திரங்களா லாக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சூக்குமரந்திரமும் சிற்றுருவிளக்கி (Microscope) யென்னும் பூதக்கண்ணுடியின்றிப் பார்க்கமுடியாதபடி அதிநுண்ணளவினதாயிருப்பினும், அது தெளிவாயும் தனித்தனியாயும் உயிருள்ளதாயும் வெவ்வேறு வேலையைச் செய்வதாயுமிருக்கின்றது.

உயிரின் முதல் வடிவங்கள்—(First Forms of Life)

உலகத்தில் உயிரின் திட்டமான முதல் வடிவம் யாது—அஃதாவது, எதோ வொன்று தனக்குத்தானே உயிர் பெற்று நிலைத்திருக்கச் சக்தி வாய்ந்தது—அது நமக்குத் தெரியாது. அது, நுண்ணுயிர்களாகிய நோயணுக்கள் அல்லது சிற்றுயிர்கள் (Bacteria or Microbes—Micros-small, Bios-life) இவற்றினும் மிக அற்பமான (Simple) எதோ வொன்றாக விருக்கக் கூடியது. அவற்றை நாம் சதாரணமாகக் "கருக்கள்" (Germs) என்று சொல்லுகிறோம். "கரு" என்று சொல்வதால் "உயிரின் தொடக்கம் அல்லது உயிரின் எழுச்சி" (The begining or start of life) என்னும் பொருளைத்தானே விளக்குகிறது.

நுண்ணுயிர்கள் (Microbes) என்பவை ஒவ்வொன்றும் ஒரே சூக்கும ரந்திரமுள்ள தேகங்களுடையன (One called bodies). அவை யெங்கு மிருக்கின்றன. அவை யில்லாத இடங்களைக் காண்பதரிது. நாம் சுவாசிக்கும் ஒவ்வொரு மூச்சிலும், உண்ணும் ஒவ்வொரு ஆகாரத்திலு மிருக்கின்றன. அவற்றுள் சில, உயிர் வளருதற்கு உதவியாகின்றன. சில, உயிரைக் கெடுக்கின்றன. சில, புட்பங்களையும் தாவரங்களையும் நாசஞ் செய்கின்றன. சில, அவற்றை வளரச் செய்கின்றன. சில, நாம் குடிக்கும் பாலைப் புளிக்கச் செய்தும், இறைச்சி, பழம் முதலியவற்றை அழுகச் செய்து விஷமாக்குவது போலவும், சர்க்கரை, மதுசாரமாகவும் கரியமில வாயு (Carbonic Acid Gas) வாகவும் மாறி இரண்டு விஷங்களை யுண்டாக்குவது போலவும், நாம் உண்ணும் ஆகாரத்தைக் கெடுத்து விஷமாக்குகின்றன. சில, நம்மைச் சுகமாக வைக்கின்றன. இன்னுஞ்சில கொடிய நுண்ணுயிர்கள் நம்முடைய தேகத்திற் புகுந்தும் இறந்து போகின்றன. மற்றுஞ்சில, தேகத்தில் உயிரோடிருந்து, அபாயத்திற்கிடமான நோயை யுண்டாக்குகின்றன. அந்நோயினால் நீண்ட காலந் துன்பமுற்று அவற்றோடு போராடி யொழித்தால் தான் அவற்றைச் செயித்தல் கூடும். அநேக நோய்களில் வியாதிக்கருக்கள் (Disease Germs) வலுத்து நோயாளியைக் கொன்று விடுகின்

றன. ஆகையால், நம்மில் ஒவ்வொருவருந் தேக சுகத்திற்கு முக்கியமானது எதுவென்றும், சுத்தமும் மிகுதியுந் தகுதியுமான காற்றையும், சூரிய வெளிச்சம், நல்லுணவு, தேகசுத்தம், சுகாதாரநியமங்களிவற்றையனுசரிக்கவும், புகை பிடித்தல், மதுபானஞ் செய்தல் நேரஞ்சென்று உண்ணலுறங்கல், சன நெருக்கமுள்ள இடங்கள் முதலியவற்றை விலக்கவுந் தெரிந்து கொள்வோமானல் கொடிய வியாதிக் கருக்களால் நோயுண்டாகாதபடி நம்மை நாம் காத்துச் சுகமாய் வாழலாம்.

அமீபா—Amœba. ஒரே சூக்குமரந்திரமுடைய முழுப்பிராணி.

தேங்கி யிருக்கும் நீரிலிருந்து ஒரு துளி நீரை யெடுத்துப் பார்ப்போமானல் அதில் நாம் ஒன்றையுங்காணமாட்டோம். அத்துளி நீரையே சிற்றுருவிளக்கி (Microscope) யென்னும் பூதக்கண்ணுடியின் மூலமாய்ச் சோதிப்போமானல் அதில் அநேகம் பிராணிகளைப் பார்க்கக் கூடும். அப்பிராணிகளோவ்வொன்றும் ஒரே சூக்குமரந்திரமுள்ள முழுப்பிராணிகளாம் (one celled animal) அப்பிராணியைப்பற்றி இரண்டு மூன்று விஷயங்களை யிங்கே குறிப்பிடுவோமாக.

(1) அதற்குக் கண்களுங்கைகளுமில்லை; ஆயினும், அதுதன் ஆகாரத்தைத் தேடிப் பற்றிக்கொள்ளுகிறது. அதற்கு வாயில்லை; ஆயினும், அது ஆகாரததை விழுங்குகிறது. அதற்கு வயிறில்லை; ஆயினும், அது ஆகாரத்தைச் சீரணித்துக் கொள்ளுகிறது. அதற்குச் சுவாச வுறுப்பில்லை; ஆயினும், அது உயிர்வாயு (Oxygen) வை உட்கொள்ளுகிறது. அதற்கு மூளையில்லை; ஆயினும், அதுதன் ஆகாரத்தை யெப்படியோ ஆச்சரியப்படத்தக்க விதமாகத் தேடிக் கொள்ளுகிறது. அது தனக்கு வேண்டும் போது வாயை யுண்டாக்கிக் கொண்டு, தன் இரையை விழுங்குகிறது.

(2) அது சுவச்சமானது (transparent) அது மாவாற்கிண்டிய இளகிய களிபோலும் வழுவழுப்பான (gelly-like) திரண்ட பொருள். மிகுதியாய் நீர்கொண்டுள்ளது. ஏனெனின் எல்லாவுயிருள்ள பொருள்களும் உயிரோடிருப்பதற்குத் தகுதியாக்கிக் கொள்ள

எப்போதும் போதுமான நீர் கொண்டிருத்தல் வேண்டும் (மது சாரம் உயிருக்கு வேண்டாத பொருளாகும்)

(3) அதன் சூக்குமரந் திரத்தினுள்ளே பொட்டிட்டது போல ஒரு சிறு கறுப்புப்புள்ளி (black speck) யிருக்கின்றது. அதனை "நூக்ளியஸ்" (Nu-cle-us) "அந்தர் பீஜம்" என்று சொல்லப்படும். அதுதான் வித்து (Kernal). சூக்குமரந்திரம் வேலை செய்வதற்கு அந்தர் பீஜம் முக்கியமாகும்.

அந்தர் பீஜம் சூக்குமரந்திரத்தின் முக்கிய பகுதியாகும்—(The Nucleus the chief part of the cell.

அந்தர் பீஜம், சூக்குமரந்திரத்தின் மூளை அல்லது பிரதானமாகும். ஒரு பையனுடைய மூளை, அவனுடைய குணசிசயத்தை நிச்சயித்து, அந்தப் பையனுக்கும் மற்றப்பையனுடைய வேலைக்கும் வித்தியாசத்தைத் தெரிவிக்கிறது போல, அந்தர் பீஜம் சூக்குமரந்திரத்தின் வேலையையும் அதன் சுபாவத்தையும் நிச்சயிக்கிறது.

அந்தர் பீஜமின்றிச் சூக்குமரந்திரம் பிரியமாட்டாது. அது சூக்குமரந்திரம் வளரத்தொடங்கும்போது நீளுகிறது. பிறகு, அது பிரிகிறது. வரவர ஒரு சூக்குமரந்திரம் இரண்டாகப் பிரிகிறது. பிரிந்த ஒவ்வொரு பகுதியும் உயிருடன் சீவிக்கின்றது. அவை வளர்ந்ததும் முன்போல அவ்விரண்டும், இரண்டிரண்டாகப் பிரிந்து புதிய சூக்குமரந்திரங்களுண்டாகின்றன.

இவ்விதமாகவே தாவரங்களும் பிராணிகளும் குழந்தைகளும் வளருகின்றன. ஒவ்வொரு சூக்குமரந்திரமும் அநேக சூக்கும ரந்திரங்களாகிக் குழந்தை பூரண வளர்ச்சி பெறுகின்றது. சூக்கும ரந்திரங்கள், உயிருள்ள வேறு சூக்கும ரந்திரங்களிலிருந்து உண்டாகக் கூடுமே யல்லது உயிரற்ற மற்றவற்றினின்றும் உண்டாகக் கூடுமானவையே யல்ல. ஒரு கோழிக்குஞ்சு அநேக சூக்கும ரந்திரங்களையுடைய பிராணியாகும். அது, முட்டையில் ஒரு சூக்குமரந்திரத்திலிருந்தே வருகின்றது.

அந்தர்பீஜம் (Nucleus) சூக்குமரந்திரத் (Cell) தின் ஒரு பகுதியேயாம். மற்றொரு பகுதி பிரதமபீஜம், ஜீவதாது அல்லது

மூலசத்தை $ (Protoplasm—ப்ரோடொப்லாஸம்—First Forming Stuff) என்று சொல்லப்படும். மூலசத்தைச் சுற்றிலும் மெல்லிய சுவர் மூடியிருக்கும். அதற்கு மூலசத்தை மூடி அல்லது பிரதம பீஜாவரணம் (Cellwall) என்று பெயராம். மூலசத்தை யென்பது உலகத்தில் அதி அற்புதமான பொருளாகும். அதுவே ஜீவ ராசிகளுக்கெல்லாம் மூலாதாரமான பொருள். அதனையின்றி உயிரில்லை. அந்தர்பீஜமும் அதைச்சுற்றியிருக்கும் மூலசத்தையும் மூல சத்தை மூடியுங் கூடியே சூக்குமரந்திரமாகிறது. அம்மூலசத்தையின் மூலமாகவே புல்லின் ஒவ்வொரு தளிரும் வளருகின்றது, புட்பங்கள் பூமியை அழகுபடுத்துகின்றன. பறவைகள் நமக்கு இன்பமுண்டாகப் பாடுகின்றன. அதன் மூலமாகவே ஒவ்வொரு உயிருள்ள பொருளும் சீவிக்கின்றது, இயங்குகின்றது, நிலைத்திருக்கின்றது. ஆகவே, மூலசத்தை அல்லது பிரதம பீஜமே எல்லாச் சீவராசிகளுக்கும் மூலதாரமாயிருக்கின்றது.

சூக்குமந்திரங்கள்—உயிருள்ள சீவதாது—Cells—Living Protoplasm.

சூக்குமரந்திரங்கள், உயிருள்ள சீவதாதுவின் நுண்ணிய திரண்ட பொருளாகும். அவற்றின் மூலமாகவே எல்லா உயிருள்ள தாவரங்களும், பிராணிகளும் நிலைத்திருக்கின்றன. அவை உயிரின் துவக்கங்களேயாகும். அவை உயிரின் இயற்கை வடிவங்கள். அவை உயிருள்ளவையானதால் அவைகளுக்கு ஆகாரம் வேண்டும், அவை உயிர்வாயுவை யுட்கொள்ளல் வேண்டும். அவை அசுத்தப் பொருள்களை வெளியே கழித்தல் வேண்டும். அவை தங்கள் இனங்களை விருத்தி செய்தல் வேண்டும், அல்லது பிறப்பித்தல் வேண்டும்.

$ சத்தை ≃ இருக்கை, இருப்பு ≃ Existence.

பலவகைச் சூக்குமரந்திரங்கள் பலவகை வேலைகளைச் செய்கின்றன.

ஒரு கழுதை அல்லது ஒரு தக்காளி (tomato), ஒரு குரங்கு அல்லது ஒரு அரசன், ஒரு முட்பன்றி அல்லது ஒரு நீர் யானையிவற்றுள் சூக்குமரந்திரங்கள் வித்தியாசமின்றி நிறைந்திருப்பது பெரும் வியப்பைத் தருகின்றது. மனிதசஞ்சார மில்லாத தீவில் ராபின்ஸன் குருஸோ தனக்கு ஆகவேண்டிய காரியங்களை யெல்லாந் தானே செய்து கொள்ள வேண்டியிருந்தது போல அமீபா (amœba) பிராணியைப் போன்ற ஒரே சூக்குமந்திரமுடைய பிராணி தனக்கு ஆகவேண்டிய வேலைகளை யெல்லாந் தானே செய்து கொள்ள வேண்டும், ஆனால், அநேக சூக்குமரந்திரங்களையுடைய தாவரங்களிலும் பிராணிகளிலுஞ் சில சூக்குமரந்திரங்கள் குறிப்பிட்ட வேலைகளைச் செய்கின்றன. ஒரு தேசத்தில் சில சனங்கள் எல்லோருக்காக துணிநெய்கிறார்கள், சில சனங்கள் எல்லோருக்காக நிலக்கரி தோண்டுகிறார்கள், சிலர் எல்லோருக்காகத் தண்டவாள மின்சார ரதம் (tram) புகை வண்டித் தொடர் செலுத்துகிறார்கள், சிலர் எல்லோருக்காக ஆகாரங் கொண்டு வருகிறார்கள், சிலர் இவ்வேலைகளைச் செய்ய வழிகாட்டுகிறார்கள், இன்னுஞ் சிலர் இவ்விதமாகவே வேறு வேறு வேலைகளைச் செய்கிறார்கள். இதுபோலவே நமது சரீரமும் வேலை செய்கிறது. அஃதெப்படி? வயிற்றின் சூக்குமரந்திரங்கள் மற்றவைகட்காக ஆகாரத்தைச் சீரணிக்கின்றன. தசை சூக்குமரந்திரங்கள் மற்றவைகளுக்காக அசைகின்றன. கண்ணின் சூக்குமரந்திரங்கள் மற்றவைகளுக்காகப் பார்க்கின்றன. மூளையின் சூக்குமரந்திரங்கள் இவற்றை யெல்லாம் அடக்கியாளுகின்றன. அவ்வாறு வேலை செய்யும் சூக்குமரந்திரங்களுக்கு உணவளித்து உஷ்ணமுள்ளவைகளாக வைத்தல் வேண்டும். அதற்காக மற்றச் சூக்குமரந்திரங்கள் மற்றவைகட்கு வேண்டும் உணவையும் உயிர் வாயுவையுங் கொடுக்கின்றன. சூக்குமரந்திரங்கள் இவ்வாறு வேலை செய்வதினாலே அவை "ஒன்று எல்லாவற்றிற்கும், எல்லாம் ஒன்

றக்கும்" (Each for all and all for each) என்னும் பிரமாணத்தை யொட்டி நடப்பதாகக் காணப்படுகிறது.

மேலே தெரிந்தபடி ஒவ்வொரு சூக்குமரந்திரமும் சாமர்த்திய முள்ள வேலைக்காரனை யொத்திருக்கின்றது. அது தன்னுடைய வேலையைத் தெரிந்து கொண்டு அதன்படி செய்கிறது. அதற்கு ஆகாரமும், உயிர்வாயுவும், உஷ்ணமும், விஷவஸ்து சேராமையும் இருக்குமாயின், அது தன் வேலையைச் சாதாரணமாக நன்றாய்ச் செய்ததாகும். ஆனால், ஏதேனுஞ் சம்பவித்துச் சூக்குமரந்திரங்க ளுக்குக் கெடுதி நேரும்மாயின் அப்போது எல்லாச் சூக்குமரந்திரங்க ளுக்குந் துன்பமுண்டாகும். வயிற்றின் சூக்குமரந்திரங்கள் ஆகா ரத்தைச் சீரணிக்க மறுத்தாலும் அல்லது சுவாச வுறுப்புக்களின் சூக்குமரந்திரங்கள் உயிர்வாயுவை யுதவமறுத்தாலும், மூத்திராசயங் கள் (kidneys) கழிவுகளைக் கழிக்க மறுத்தாலுந் தேகத்தில் விஷந் தங்க நேரிடும். பிறகு, எல்லாச் சூக்குமரந்திரங்களுக்குந் துன்ப மும் அதனால் அபாயமுமுண்டாகிச் சூக்குமரந்திரத்தொகுதி முற்றும் இறந்து போம். ஒவ்வொருவரும் இச்சூக்கும ரந்திரங்களின் வேலை யைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். மனிதனானவன், மற்றப்பிராணி அல்லது தாவரத்தைப்போலவே தன் சுகத்திற்கும் இன்பத்திற்கும் தன்னுடைய சூக்குமரந்திரங்களின் நிலைமையைப் பொறுத்தவனாகின்றான். சூக்குமரந்திரங்கள் சுகமாயிருக்குமானால் தேகம் சுகமாயிருக்கும். நல்ல வேலையுஞ் செய்தல் கூடும். அவைக ளுக்குக் கெடுதி நேருமாயின் தேகத்திற்குத் துன்ப முண்டாகி அத னுடைய வேலையுங் குறைப்பாட்டையும். சூக்குமரந்திரங்கள் இறக்கு மாயின் தேகம் இறந்ததாகும். ஆதலால், சூக்குமரந்திரங்களைச் சுக மாய் வைத்துக் கொள்வது நமது கடமையாகும். நல்ல ஆகாரம், மிகுதியுஞ் சுத்தமுமான காற்று, தேகசுத்தம், இடச்சுத்தம், தேகப் பயிற்சி, குற்றமற்ற வாழ்க்கை யிவைகளே சூக்குமரந்திரங்கள் தங் கள் வேலையைச் செய்வதற்குத் தகுதியாகவும் நல்ல நிலைமையில் வைக்கவும் உதவி செய்கின்றன. ஆயின், நாம் அறிந்துகொள்ள வேண்டுவது என்ன ?

மதுசாரம் சூக்ஷ்மரந்திரத்திற்கு விஷமாகும் என்பதாய்—Alcohol is a cell poison.

மதுசாரம் பட்ட ஒவ்வொரு சூக்குமரந்திரமுங் கெட்டுப்போகிறது. முக்கியமாகச் சிறுவர்கள் சூக்குமரந்திரஞ் சீக்கிரங் கெட்டுப் போகிறது.

மதுசாரஞ் சிறிதளவாயினும், அது சூக்கும ரந்திரத்தின் ஆகாரத்தையும் உயிர்வாயுவையும் அபகரித்துவிடுகிறது. அதனாலே சூக்குமரந்திரத்திற்குத்தன் வேலையைச் சரிவரச் செய்யவும், வேறு சூக்குமரந்திரங்களைப் பிறப்பிக்கவும் இயலாமற் போகிறது. மதுசாரம் அதிக அளவாயின் சூக்குமரந்திரத்தை யுடனே கொன்றுவிடுகிறது.

சிறு பிள்ளைகள் வளர்ந்து வரும் பருவத்தில் மதுசாரம் அபாயமுள்ளதாயுந் தீங்கு செய்வதாயு மிருக்கிறது.

மதுசாரம் குழந்தையின் உயிருக்குப் பகையாகும்.

பிரான்விலிருந்து அமெரிக்காவிற்கு ஒரு புறா பறந்து சென்றதாம். அதை ஜெ. பி. மார்ட்டின் என்னும் குடியானவன் கண்டு பிடித்தானும். அந்தப்புறாவின் காலில் விவி:பிரான்ஸ் என்ற பெயர் பொறித்த மோதிரம் கட்டப்பட்டிருந்ததாம்.

நாம் மூச்சு விடும்பொழுது அந்த மூச்சினது வேகமான ஓட்டம் பன்னிரண்டங்குலம் வரையில் செல்லும். அதில் ஒரு அங்குலங் குறைந்தால் இயற்கையிலே மாறுதலுண்டாகி ஒருவித வைராக்கியந் தோன்றும். இரண்டு அங்குலங் குறைந்தால் ஆனந்த முண்டாகும். மூன்று அங்குலங் குறைந்தால் பாட்டுப்பாட வல்லவனுவான். நான்கு அங்குலங் குறைந்தால் வாக்கு பலித மாகும். ஐந்தங்குலங் குறைந்தால் கண்ணொளி யுண்டாகும். ஆறங்குலங் குறைந்தால் ஆகாய கமனஞ் செய்யலாம். ஏழங்குலங் குறைந்தால் அதிவேகமாய் நடக்கலாம். எட்டங்குலங் குறைந்தால் அணிமா லகிமா முதலிய அஷ்ட சித்திகளும் பெறலாம். ஒன்பதங்குலங் குறைந்தால் திரவியப் பேறுண்டாகும். பத்தங்குலங் குறைந்தால் பரகாயப் பிரவேசம் செய்யலாம். பதினோரங்குலம் குறைந்தால் சரீரத்தின் சாயை தோற்றுது. பன்னிரண்டங்குலங் குறைந்சால் பிறத்த லிறத்தல் வாரா. அமிர்தத்தை உண்டு அமிர்தத தன்மை பெறலாம். அங்ஙனம் நகம் முதல் சிரசு வரையில் பிராணவாயு சஞ்சரித்துக் கொண்டே யிருக்கும். சோறுண்ணுதல் தண்ணீர் குடித்தல் முதலியவை வேண்டாவாம்.

உலகப் போக்கு

இமய மலையிலுள்ள சிம்லாக் குன்றை எதிர் நோக்கி நிற்கும் ஆயிரம் அடி உயரமுள்ள ஜக்கோ என்ற குன்றின் சிகரத்தில் கட்டப் பட்டிருக்கும் பிரசித்தி பெற்ற ஹனுமான் கோவிலின் மஹந்து பட்டத்தைச் சென்ற ஜூன் மாதம் 13-ந்தேதி யன்று ஐரோப்பியர் ஒருவர் வகித்து வருகிறார். மஹந்து பட்டச் சூட்டு வைபவம் விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. இவருக்கு பாவா மஸ்த்ராம் என்று நாமகரணம் செய்யப்பட்டது. இவருடைய பூர்வ நாமம் சார்லி-டி ருஸ்ஸெட். இவருக்கு வயது 78-க்கு மேலாகிறது. இவர் இளமைப் பருவம் முதல் ஸிம்லாவுக் கருகில் வசித்து வந்தார். இவருடைய பால்ய பருவத்தில் இவரை அறிந்தவர்கள் அனைவரும் இவர் பிரெஞ்சு ஜாதியிற் பிறந்த ஈஸ்ட் இந்திய வகுப்பைச் சேர்ந்தவர் என்று சொல்லி வருகிறார்கள். ஆனால் இந்தப் புதிய மஹந்து தாம் காசா பிரெஞ்சுக்காரர் என்று சொல்லிக் கொள்கிறார். இவர் சிறு வயதிலேயே சிம்லாவி லுள்ள பிஷப் காட்டன் பாடசாலையில் கல்வி கற்று வந்தார். இவருக்குப் பத்து வயது முடிவதற்குள் இவருடைய பிதா இறந்து போனார். அதனால் இவர் இந்த ஜக்கோக் குன்றின் உச்சியில் கட்டப்பட்டிருக்கும் ஹனுமான் கோவிலில் இருந்துவந்த ஓர் சாதுவினிடம் சென்று அவருக்கு சீடனாக அமர்ந்தார். அவரை இவருடைய முன்னோர்களின் மதத்தைத் தழுவி வரும்படி முயற்சிகள் செய்தும் அவை பலிக்காமற் போயின. இவருக்கு ஹிந்து மதத்திலேயே பற்று இருந்து வந்ததனால் சார்லி என்ற பூர்வ நாமத்தைப் பெற்று நமது புதிய மஹந்து அன்று முதல் ஹிந்து மதத்தையே தழுவி வந்தார். இவர் ஜாக்கோ குன்றிலுள்ள ஓர் தனிமையான இடத்திற்குச் சென்று அங்குள்ள ஓர் விருக்ஷத்தின் அடியில் இரண்டு வருஷ காலம் தனிமையாக வசித்து வந்தார். அக்காலத்தில் இவருக்கு ஆகாரம் கொண்டு போய்க் கொடுத்து வந்த ஆட்களைத் தவிர வேறு எவரையும் இவர் காண

வில்லே. இவர் அவ்விடத்திலுள்ள குரங்குக் கூட்டத்தின் மத்தியில் இருந்து வந்தார். அதன் பிறகு ஹிந்து மதத்து சன்னியாசத்தை வகித்து வந்தார். இருபது வருஷங்களுக்கு முன் இவர் அனன்டேலி லுள்ள ஓர் ஹிந்து கோவிலுக்குள் தனிமையாக வசித்து வந்தார். கொஞ்ச காலத்திற்கு முன் ராஜ ஸர். டல்ஜிட் சிங்க் என்பவர் இந்த சன்னியாசிக்கு ஜாக்கோக குன்றில் ஓர் வீட்டைக் கட்டிக் கொடுத்து அதில் தங்கி யிருக்கும் படியாக அவரைக் கேட்டுக்கொண்டார். ஜாக்கோ கோவிலின் மகந்து சமீபத்தில் இறந்து போனதினுல் சார்லி-டி ரூஸ்ஸெட் என்ற பெயர் கொண்ட நமது பாவா மஸ்த்ராம் மஹந்து பட்டத்தை வகித்து, அந்தப் பரிசுத்தமான உன்னதப் பதவியைச் சென்ற ஜூன் மாதம் 13-ந் தேதி முதல் வகித்து வருகிருர்.

***

இத்தலி நாட்டின் தலைநகரான ரோமாபுரியில் வாழைப் பழத்திற்கு அதன் எடை யளவு வெள்ளி கொடுத்தாலும் அப்பழம் கிடைப்பது அருமையாம். அவ்வாறு கிடைத்தாலும் அப் பழம் திருட்டுத்தனமாக அதிக விலைக்கு விற்கப்படுமேயன்றி சாதாரணமாக வாழைப் பழமே கிடைக்காது. வாழைப் பழம் இத்தாலி தேசத்தில் இறக்குமதி செய்யக் கூடாதென்று சர்க்கார் தடை உத்தரவொன்று பிறப்பித் திருப்பதாகத் தெரிகின்றது. யாராவது பேராசையால் ஏராளமான பழத்தை இறக்குமதி செய்யாமல் தடுப்பதன் பொருட்டுச் சர்க்கார் இத்தடை உத்தரவை முன் எச்சரிக்கை செய்யாமல் திடீரென்று பிறப்பித்து விட்டதாகச் சொல்லுகின்றனர் ரோம் நகரில் உஷ்ணம் அதிகமா யிருப்பதால் எந்தப் பழத்தையும் கெட்டுப் போகாதபடி இரண்டொரு தினங்களுக்குமேல் வைத்திருப்பது சாத்திய மல்ல. இதன் சம்பந்தமாக எவ்வளவு ஆக்ஷேபித்தும் பயன்படவில்லை. இத்தகைய தடை உத்தரவு உள்நாட்டில் பயிரான பழ வகைகளுக்குப் பாதுகாப்பளிப்பதன் பொருட்டுத் தான் பிறப்பிக்கப் பட்டதாகத் தெரிகின்றது.

***

உலகப் போக்கு

இத்தலியில் சினோர் பிட்ரோ வெர்நாட்டி என்ற பிரபு ஸ்ரீமதி டெட்ராசினி என்ற அழகிய பாடகியைச் சென்ற வாரத்தில் ப்ளோரென்சி லுள்ள சாந்த மரியா கோயிலில் கலியாணஞ் செய்து கொண்டாராம். அப்பொழுது மணமகள் சுமார் நாற்பதினாயிரம் பவுண் மதிப்புள்ள நகைகளையும் உடைகளையும் தரித்திருந்தாளாம். இந்தக் கலியாணத்தில் கணவருக்கு வயது 32. பெண்ணுக்கு வயது 53. ரோமா புரியில் டெட்ராசினி பெரிய பாடகி. அவள் வீட்டில் ஒரு அறையில் பிரபு வெர்நாட்டி இரண்டு ஆண்டுகளுக்கு முன் குடியிருந்தாரும். அப்பொழுது அவள் பாடிய சங்கீதத்தில் லயப்பட்டுப் பிரபு அவள் மீது காதல் கொண்டு விட்டாராம். இந்த மணமக்களை வாழ்த்தி சினோர் முசலோனி உட்பட இத்தலி நாட்டுப் பெரியோர் பலர் தந்தி.அனுப்பி யிருந்தார்களாம்,

***

பெல்ஜிய நாட்டு அரசரான ஆல்பர்ட் மன்னர் சமீபத்தில் பிரஞ்சு நாட்டு எல்லையைக் கடந்து சென்றபொழுது சுங்கக் காவலாளிகள் அவரை நிறுத்திச் சோதனை செய்தார்கள். அவர் மெய் காப்பாளருடன் சாதாரண மனிதர் போல ஒரு மோட்டார் வண்டியில் போனாராம். ஆல்பர்ட் அரசர் தம்மிடம் ஒன்று மில்லை யென்று சொல்லியும் சங்கச் சாவடி உத்தியோகஸ்தன் அவரைச் சோதிக்க விரும்பினான். அது கண்ட அவர் மெய்காப்பாளர் திடுக்கிட்டு அதனை ஆட்சேபிக்கத் தொடங்கிய பொழுது அரசர் தடுத்து விட்டார். சுங்க உத்தியோகஸ்தன் அரசரின் சட்டைப் பையைச் சோதித்ததில் தீர்வை விதிக்கத் தக்கவை ஒன்றும் இல்லை. ஆனால் மற்றொரு பையில் இருந்த அரசரின் சிகரட் பெட்டியை வெளியே எடுத்த பொழுது அதில் பெல்ஜிய அரச சின்னங்கள் இருந்ததைக் கண்டு திகி லடைந்தான். ஆயினும் ஆல்பர்ட் அரசர் கடமையைச் சீராகச் செய்த சுங்க அதிகாரியை முதுகில் தட்டிக்கொடுத்து மகிழ்ச்சி யடைந்தாராம்.

***

பர்மாவில் மாண்டலேப் பகுதியில் ஒரு கிராமத்தில் சுகவீனமா யிருந்த ஒருவன் மார்பில் சதை அதிகமாய் வளர்ந்திருந்தது பற்றி

அதனைச் சத்திரம் இட்டதில் தலையும், மயிரும் இரண்டு வெள்ளைக் கொம்புகளும் உள்ள ஒரு சிறிய பசு இருந்ததாம். அதனை ஒரு கண்ணாடிப் புட்டியில் வைத்திருக்கிறார்களாம்.

* * *

இங்கிலாந்தின் முதன் மந்திரியாயிருந்த பால்பர் பிரபுவுக்குச் சென்ற ஞாயிறன்று எண்பதாவது வயது தொடங்கியது. அவரை அன்று ஒரு பத்திரிகை நிருபர் கண்டு பேச வந்த பொழுது கைக் குட்டையை அசைத்து விட்டு நான் பந்தாடப் புறப்பட்டு விட்டேன். உங்களிடம் பேச முடியாததுபற்றி வருந்துகிறேன் என்று சொல்லி விட்டுப் போனாராம்.

* * *

1921-ம்ஆண்டில் ஒரு நாள் தமிழ் நாட்டுத் தேசபக்தர்களுள் ஒருவர், பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஜனங்கள் அநுபவிக்குக்கும் கஷ்டங்களைப் பற்றி மிக ஆவேசமாகப் பிரசங்கமாரி பொழிந்து கொண்டே வருகையில், "ஐயா! இந்த நாட்டிலே பிறந்த நமக்கு நம் பெண்டாட்டியை அடிக்கும் சுதந்திரம் கூட இல்லை! பெண்டாட்டியை அடித்தால் போலீஸ்காரன் குறுக்கே வருகிறான்." என்று ஆத்திரத்துடன் சொன்னாராம்.

* * *

அலாஸ்கா நாட்டில் ஆறடி உயரத்தில் புற்கள் வளர்கின்றனவாம்.

* * *

நீல நதி தீரத்தில் ஒன்பதாயிரம் வகையான மீன்கள் வாழ்கின்றனவாம்.

* * *

ஆப்ரிக்காவிற் கருகிலுள்ள மடகாஸ்கர்த் தீவில் மணமகனாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறவனைக் கொஞ்ச தூரத்தில் நிறுத்திக் கூர்மையான ஈட்டியை அவன் மேல் எறிவார்களாம். அவன் சற்றும் பயப்படாமல் அதைத் தன் கைகளினால் பிடித்துக் கொள்ள வேண்டுமாம். இந்தப் பரிட்சையில் தேறினால் தான் அவனைத் தகுதியானவனாகக் கருதுவார்களாம்!

* * *

காலனைக் கட்டி யடக்கிய

கடோரசித்தன்

(ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை எம் ஏ எழுதியது.)

(காபி ரைட்)

லக்ஷ்மி சமேதராய் ஒருநாள் வைகுண்டத்தில் எமது நாராயண மூர்த்தி திருவோலக்கங் கொண்டெழுந்தருளி யிருந்தார். அப்போது எம்பெருமான் திருச் செவியில் பூலோகத்தி னின்றும் "ஹரிகேசவா! ஹரி நாராயணா! சங்கு சக்ர கதாபாணி! புருஷோத்தமா! ஜெயதுங்க முகுந்தா! நீ காக்கைக் கடவுளன்றோ! இந்தக் கள்ளர் தலைவன் கடோர சித்தனைத் தொலைத்து எங்களைக் காத்தருளல் வேண்டும்" என ஒரு பெரிய முறையீடு கேட்டது. இம் முறையீட்டைக் கேட்ட முராரி வாளா இருந்தனர். அங்ஙனம் இருக்க முடியவில்லை எங்கள் மாதா லக்ஷ்மி தேவிக்கு. "நீங்கள் ஏன் இந்த முறையீட்டைக் கேட்டும் இரக்கங் கொள்ளா திருக்கின்றீர்கள்? அன்று முதலை வாயுற்ற யானை புலம்பிய போது ஓலமெனறுதவின க்ருணாகர மூர்த்தி யாயிற்றே நீங்கள்" என வினவினள். அதற்கு எழலி வடிவினர் "கடோர சித்தன் ஒருவன்; முறையிடுவோர் பலர்" ஒருவனை வெல்லும் ஆற்ற லில்லாத அந்த அறிவிலிகளுக்கு நான் இரங்கேன். அறிவு யாண்டுளதோ ஆண்டுள்ளேன் நான்; பிறிதிடஞ் சேரேன்"—என விடை பகர்ந்தனர். நன்றே எனக் கூறிச் செங்கமல மலர்மாதுங் கம்மென்றிருந்தனள். இங்ஙனம் பல நாள் முறையிட்டனர் பாருளோர். மதுசூதனரும் புன்னகையுடன் சும்மா இருந்தனர். யாருக்கும் அடங்காக் கடோர சித்தனுடைய கொடுஞ் செயல் விருத்தியுற்றன. அவன் கொள்ளை கொள்ளாத வீடே கிடையாது. அவனுக்கு அஞ்சாத உயிரே கிடையாது. "ஆசைக்கோரளவில்லை அகிலமெல்லாங் கட்டியாளினும்" என்ற பெரியார் வாக்கு பொய்க்குமோ! கடோர சித்தன்

“ இனி நாம் கொள்ளையிடப் பாக்கியாய் நிற்பது இக் கண்ணபுரத்தி லுள்ள கருடகேதனன் திருக்கோயிற் பொருள்களே ” என நினைத் தனன். கோயிலைச் சார்ந்த பசுக்களை முதலிற் கவர்ந்தனன். பின்னர் கோயிலாபரணங்களை வௌவினன் ; பின்னர், தங்க ஸ்தூபிகள் முதலியவற்றைத் தகர்த்தெடுத்தனன். பார்த்தனர் பெருமாள்! “ நன்று! நன்று! நான் வாளா இருந்தது போதும். எனக்கே வழிவைக்கின்றான் இந்தக் கடோர சித்தன் ”—என நகைத்துக் கடுநரகாளும் தருமராஜனை நினைத்தனர். தருமனும் எதிர்தோன்றி வணங்கினன். “ கண்ணபுரத்துக் கடோர சித்தனை இன்றே கொல் லுக, இன்னே கொல்லுக. இன்றேல் எனக்கு இரக்கம் வரக்கூடும். யான் இரங்குமுன் அவனை அடக்குக.” எனக் கட்டளை யிட்டனர் கமலக் கண்ணரும். நன்றென ஏகினன் யமதருமராஜனும். தனது இருப்பிடம் போய்த் தனது பிரதம மந்திரியும் தூதனும் பிரதிநிதியுமாகிய காலனைக் கூவி “ கால! கண்ணபுரத்துள்ள கடோர சித்தனுக்குக் காலங்கிட்டிவிட்டது. அவனை உடனே ஈண்டுக் கொணருதி. தாமதிக்கவேண்டாம் ” என ஏவினன். கால னுங் கண்ணபுரத்துக்கு ஏடுகினன். கடோர சித்தன் வீட்டிற் புகுந்தனன். அப்போது தான் கடோரசித்தன் கூடத்தில் கட்டி லின் மீது சட்ட திட்டமாய் வீற்றிருந்து பாலும் பழமும் உண்ணும் நிலையில் இருந்தனன். உள்ளே நுழைந்த காலன் “ புறப்படடா கள்ளா !” எனக் கூறி வெருட்டாது “ அப்பனே, முத்தமிட்டேன் உன்னை ” எனக் கூறி நெருங்கினன். யாருக்கும் அஞ்சாத கடோர சித்தனும் காலனுர் கோரவுருவைக் கண்டு கலங்கினன் சிறிது. கலங்கி “ யாரப்பா நீ ?” என வினவினன். அதற்குக் காலன் “ நீ கடைசியாய்க் குடிக்கக் கொடுத்து வைத்த பாலைச் சீக்கிரங் குடி ; நான் தான் காலன் ” என விடை பகர்ந்தனன். இதைக் கேட்ட துங் கடோர சித்தன் ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு “ அப்படியா! இவ்வளவு அழகிய திருக்கோலத்தையும், கருணை உள்ளத்தையும், இனிய வசனத்தையுங் கொண்ட தங்களையா இந்தப் பாழுமனிதர்கள் “ பாவி கொடுங்காலன் ” எனத் தூஷிக்

கின்றனர். எப்படிப் பட்ட பொல்லா நோயையும் போக்க வல்ல புண்ணிய புருஷர் ஆயிற்றே தாங்கள். என் சிறு குடிலுக்குத் தாங்கள் வரும்படியான பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததே! தங்கள் மொழிக்கு எதிர் மொழி உண்டோ? இதோ உடனே வருகிறேன்; ஆனால் தங்கள் சற்று இளைப்பாறலாமே. இதோ! இந்த நாற்காலியில் சற்று உட்காரலாமே" என்றனன். காலனும் "இதேது புதுமை. எங்கும் நம்மைத் தூஷிப்பதற்குத் தான் மனிதர்களுண்டு. இவன் என்ன அவ்வளவு அன்பாய் உபசரிக்கின்றனனே"... என மகிழ்ந்து கடோர சித்தன் காட்டிய நாற்காலியில் அமர்ந்தனன். அமர்ந்த அந் நிமிஷமே அந்த அற்புத இருப்பு நாற்காலியி லிருந்து நூற்றுக்கணக்கான இரும்பு கம்பிகளைப் போன்ற வலிய கம்பிகள் எழும்பின. அவை காலனை நாலா பக்கங்களிலுஞ் சுற்றி வளைத்துச் சுருக்கிட் டழுத்திப் பாய்ந்து முறுக்கி யிறுக்கிப் பிணித்தன. வலை யிலகப்பட்ட மான் போலப் போக்கிட மற்றுக் கலங்கினன் காலன். இதைக் கண்டனன் கடோரசித்தன். "அன்பரே! கூப்பிட்டீர்களே. வாருங்கள் போவோம்; நான் வர சித்தமாயிருக்கின்றேன். என்! எழுந்து வரலாமே" என்றனன். காலனுக்கு இருந்த இடத்தி லிருந்து அணு அளவு கூட அப்படி இப்படி அசைய முடியவில்லை. கடோர சித்தனை நோக்கிக் கோபிப்பான், வேண்டுவான், வெருட்டு வான், துதிப்பான். கள்ளனோ புன்னகையுடன் "அப்பா! ஒருவன் வாழ்நாளுக் கெல்லாம் ஒரே முறை வரும் விருந்தாளி யாயிற்றே நீ. உன்னை நான் உபசரியாமற் புறக்கணிக்கலாமா? சற்று நிதானியும் அன்பரே. ஓரிடத்திலிருந்து உண்டு மகிழ்ந்திருத்தல் சுகமா, அல்லது அங்கேயும் இங்கேயும் அலைந்து அவத்தை யுறுவது நலமா? இந்நிமிஷம் ரண களத்திலிருக்கின்றாய்! மறு நிமிஷம் வைசூரி, குட்டம், நீரிழிவு, காமாலை, சுரம், பேதி முதலிய நோய்களிடையே யிருக்கின்றாய். கொந்தளிக்குங் கடலினிடையே ஓடுகின்றாய்; கொழுந்துவிட் டெரியும் தீயிடையே பறக்கின்றாய்; சுழற் காற்று போலச் சுழல் கின்றாய்; நீ செல்லும் இடமெல்லாம் கண்ணீரும் அழு குரலும் வெறுப்பும், சாபமும், நிந்திப்பும் தான். குழந்தை

யென்று பார்க்கின்றா யில்லை, குமரியென்று விடுகின்றாயில்லை. இன்று பிறந்த சிசுவும் ஒன்றே. நூறு வயது சென்ற கிழவனும் ஒன்றே. அங்க ஈனனும் ஒன்றே ; அங்க அழகியும் ஒன்றே. பக்ஷ பாதம் உனக்குக் கிடையாது. ஆதலால், உங்கள் தலைவர் யமதரும ராஜருக்கு "நடுவன்" என்றொரு பெயர் உண்டு. இப்போது இந்த நாற்காலியின் மத்தியில் இருப்பதால் உனக்கும் நடுவன் என்ற பெயர் வருமல்லவா ? நீ கூலியில்லாத வேலையாள் ; பங்கில்லாத கொள்ளைத் தலைவன் ; காரண மில்லாத கொலையாளி. இங்ஙனம் வீணாய் என் உன் காலத்தை யாவரும் வெறுக்கக் கழிக்கின்றாய். உன்னை யாவரும் விரும்ப வேண்டும் என்னும் ஆசை உனக்கில்லையா ?

(இன்னும் வரும்)

மிஸ்டர் ஸ்டுவர்ட்டு என்னும் நாவிதன் கிளாஸ்கோவின் பிரதிநிதியாக லண்டன் பார்லிமெண்டில் அங்கத்தினராக இருக்கிறார்.

***

ஸர் ஜேம்ஸ் பாரி என்னும் கதாசிரியர் தன் வலக்கை சீர்கேடாக இருந்தபொழுது மூன்று வாரத்தில் மேரிரோஸ் என்ற பெரிய கதை பூராவையும் தன் இடக்கையினாலேயே எழுதினாராம்.

***

உயிர் இருக்கையிலேயே தவறுதலாகப் புதைக்கப் பட்டவர்கள் பேசுவதற்காக ஸ்பெயின் தேசத்தில் சவப் பெட்டியில் டெலிபோன்கள் பரிட்சார்த்தமாக வைத்திருக்கிறார்களாம்.

***

மோட்டார்களும், டிராம்களும் பெருகிவிட்டதனால் குதிரைகளுக்குக் கிராக்கியில்லாமல் போய்விட்டதாம். ஆஸ்திரேலியாவில் டாம்வொர்த் என்னும் இடத்தில் நடந்த குதிரைச் சந்தையில் ஒரு குடியானவன் இருபது குதிரைகளை விற்கச் சென்றிருந்தானாம். விற்றதில் செலவு போக இருபது குதிரைகளுக்கும் எழரை ஷில்லிங்குகள் தான் கிடைத்தனவாம் !